விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 080 வள்ளுவர் ஆண்டு 2057 மாசி 25 திங்கட்கிழமை (09.03.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

உள்ளே...
தரிசனம் 01
IX
யாழ்.போதனா வைத்தியசாலை

## எந்தவொரு போர்ச்சூழலிலும் மனிதநேயத்துக்கே முன்னுரிமை

### ஜனாதிபதி அநுர திடசங்கற்பம்




(கொழும்பு)

உலகில் எவ்வாறானதொரு போர்ச்சூழல் ஏற்பட்டாலும் மனிதநேயத்துக்கே முன்னுரிமை அளிக்கப்படும். இலங்கையை உலகின் மனிதநேயமிக்க நாடாக மாற்றுவதே எமது இலக்கு என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

நேற்று (08) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் 15ஆம் பக்கம் பார்க்க

பல நாள் மீன்பிடிப் படகிலிருந்து

## ரூ.2.8 பில்லியன் பெறுமதியான போதைவஸ்துக்கள் மீட்பு



15ஆம் பக்கம் பார்க்க

# காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இழப்பீடு கேட்கவில்லை

## அவர்கள் நீதியைக் கேட்கிறார்கள் அது நியாயமானது - நீதி அமைச்சர் ஹர்ஷன



(கொழும்பு)

யுத்தத்தின் போது இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட தமது கணவர், பிள்ளைகள், சகோதரர்கள் எங்கே என்று கேள்வி கேட்கும் உரிமை உறவுகளுக்கு உண்டு. நாங்கள் இதனை மறுதலிக்கவில்லை. காணாமல்போனவர்களின் உறவுகளில் பெரும்பாலானோர் இழப்பீடு கோரவில்லை. நீதியையும், தமது உறவுகளுக்கு நேர்ந்தது என்னவென்பதையுமே கேட்கிறார்கள். இந்த விடயம் தனித்துவமானதுடன், உணர்வுபூர்வமானது என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

(04ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானிய கப்பல்களிலிருந்து மீட்கப்பட்டோருக்கு இலவச விசா

### அமைச்சர் ஆனந்த விஜேபால



(கொழும்பு)

ஈரான் கப்பல்களில் இருந்து மீட்கப்பட்ட குழுவினருக்கு சுமார் ஒரு மாத காலத்திற்கு இலவச விசாக்களை வழங்கி, மனிதாபிமானப் பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக 15ஆம் பக்கம் பார்க்க

இராணுவத்திடம் கையளிக்கப்பட்ட

## உறவுகளுக்கு நீதி கோரி முல்லைத்தீவில் போராட்டம்



15ஆம் பக்கம் பார்க்க

## சமையல் எரிவாயுவுக்கு யாழில் தட்டுப்பாடில்லை

### வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாண மாவட்டத்தில் சீரான சமையல் எரிவாயு விநியோகம் இடம்பெற்று வருவதாகவும் செயற்கைத் தட்டுப்பாடுகள் குறித்த இடர் 02ஆம் பக்கம் பார்க்க

## சொந்த மண்ணில் மகுடம் சூடிய பாரதம்




04ஆம் பக்கம் பார்க்க

அமைச்சர் ஜெயக்கொடியின்

## ஊழல் வழக்கு மீதான விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

எரிசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கு எதிரான வழக்கு விசாரணைகள் இவ்வாரம் ஆரம்பமாகவுள்ள நிலையில் குறித்த வழக்கை விசாரிப்பதற்காக கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ரஷாந்த கொடவெல நியமிக்கப்பட்டுள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முள்ளிவாய்க்காலில் உயிர்காத்த
# மருத்துவர் சண்முகராஜாவுக்கு மண்ணின் மைந்தன் விருது

ஈழத் தமிழ் மக்கள் சந்தித்த மாபெரும் இனப்படுகொலை நடந்த முள்ளிவாய்க்கால் யுத்த களத்தில் பணியாற்றிய மருத்துவர் சண்முகராஜாவுக்கு கிளிநொச்சி மக்கள் அமைப்பின் உயரிய விருதான மண்ணின் மைந்தன் விருது வழங்கப்படவுள்ளது.

அவரது மருத்துவ சேவைக்கும் சமூகப் பணிக்காகவும் இந்த விருதானது எதிர்வரும் மார்ச் 14ஆம் திகதி லண்டனில் வழங்கப்படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தின் கல்வி, சமூக மற்றும் மனித நேயப் பணிகளில் சிறந்து விளங்குபவர்களைக் கௌரவிக்கும் வகையில் "மண்ணின் மைந்தன்" மற்றும் "மண்ணின் மகள்" விருதுகள் வழங்கப்படுகின்றன.

இதற்கு முன்னரும் மருத்துவர் சத்தியமூர்த்தி, ஓய்வுநிலை ஆசிரியர் மரியதாஸ், எழுத்தாளர் தாமரைச்செல்வி மற்றும் வைத்தியர் விக்னேஸ்வரன் போன்றோர் இவ்விருதுகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-க,7)

# கவியரசு கண்ணதாசன் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தமிழியல் கழகத்தின் ஏற்பாட்டில் கவியரசு கண்ணதாசன் நூற்றாண்டு விழா முன்னோடி இலக்கியக் களம் நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பல்கலைக் கழகக் கலைப்பீடத்தின் கருத்தரங்கு மண்டபத்தில் இடம் பெறும்.

தமிழியல் கழகத் தலைவர் யோ.நிவேதன் தலைமையில் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.செல்வரஞ்சிதம் முன்னிலையில் இடம்பெறும் இந்நிகழ்வில், தமிழ் நாட்டைச் சேர்ந்த கவிஞர் காவிரி மைந்தன் முதன்மை விருந்தினராகவும் கவிஞர் கே.தி.சண்முகராஜா (கனடா) சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (ந-7)


## மீண்டும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சி

ஆலய விழாக்களிலும் சமய விசேட நிகழ்வுகளிலும் வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை விரும்புகின்றீர்களா?

உடனே தொடர்பு கொள்ளுங்கள்!

கலாபூஷணம் சைவப் புலவர்

**இராசையா ஸ்ரீதரன்**

**தொ.இல : 077 980 7223**

நகைச்சுவை : நாடக நடிகர். விமலநாதன்
ஹார்மோனியம் : மெல்லிசை வேந்தர் அருணா
மிருதங்கம் : மிருதங்க நாதமணி க.நந்தகுமார்
விற்கடம் : திரு.உமாசுதன்

நகைச்சுவை கலந்த வில்லுப்பாட்டு நிகழ்ச்சியை கேட்டுப் பாருங்கள்


# சமையல்...

...கள் களையப்படும் எனவும் வர்த்தக அமைச்சர் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மைக்காலமாக நிலவி வரும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு குறித்து கடற்தொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையிலான குழுவினருக்கும் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்கவுக்கும் இடையிலான் கலந்துரையாடல் ஒன்று நேற்று இடம்பெற்றது.

பாராளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற குறித்த கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ். மாநகர சபை உறுப்பினர் சு.கபிலன், யாழ்ப்பாண மாவட்ட அரச அதிபர், நல்லூர் பிரதேச செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் சில பகுதிகளில் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவி வருவதாக மக்களிடமிருந்து கிடைத்த தகவல்களை வர்த்தக அமைச்சரிடம் சந்திரசேகரால் எடுத்துரைக்கப்பட்டது.

அதற்குப் பதிலளித்த வர்த்தக அமைச்சர், வழக்கமான முறையிலேயே எரிவாயு விநியோகம் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

அத்துடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் பிரதானிகளுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனடியாக நிலைமையை ஆராய்ந்தார்.

ஏதேனும் நெருக்கடி நிலை ஏற்பட்டிருந்தால் அதை விரைவாகச் சரிசெய்ய நடவடிக்கை எடுக்குமாறும் நிறுவனப் பிரதானிகளுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

விநியோகத்தில் எந்தவிதத் தடையும் இல்லை என்றும் சில தரப்பினரால் செயற்கை ரீதியில் தட்டுப்பாடு ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என்றும் குறிப்பிட்டார்.

நாட்டில் நிலவி வரும் அரிசி விநியோகம் மற்றும் விலை நிலைமை தொடர்பான பிரச்சினைகளும் இச்சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. (ந-7)

உ

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

கடந்த 18.02.2026 புதன்கிழமை சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

## வரதராசா புஷ்பமலர்

(வவுனியா வடக்கு முன்னாள் கோட்டக்கல்விப் பணிப்பாளர் வரதராசா அவர்களின் துணைவி)



மலர்வு 22.05.1942

உதிர்வு 18.02.2026

அவர்களின் அந்தியேட்டி கிரியைகள் நேற்று (08.03.2026) ஞாயிற்றுக்கிழமை காலை 07.00 மணிக்கு கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றது. வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை (10.03.2026) செவ்வாய்க்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நிகழும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து நேரிலும் தொலைபேசி ஊடாகவும் ஆறுதல் அளித்தவர்களுக்கும் துண்டுப்பிரசுரங்கள், பதாதைகள் மூலம் மரியாதை செலுத்திய உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

4ம் வட்டாரம், புதறிகுடா, முள்ளியவளை, முல்லைத்தீவு.

தகவல்: குடும்பத்தினர்

(2122)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், ஊர்காவற்றுறை கடற்கரைப் பகுதியில் பொலிஸாருடன் இணைந்து இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கைகளின் போது, சுமார் 368 கிலோ கிராம் வெளிநாட்டு கஞ்சாவுடன் படகு ஒன்று பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையின் போது நபர் ஒருவரும் கைது செய்யப்பட்டதாக இலங்கை கடற்படை தெரிவித்துள்ளது.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த பெறுமதியானது 73 மில்லியன் ரூபாவுக்கும் அதிகம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கைது செய்யப்பட்ட நபர் ஊர்காவற்றுறையைச் சேர்ந்த 35 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் தொகை மற்றும் படகுடன் மேலதிக விசாரணைகளுக்காக ஊர்காவற்றுறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (8)

# ஹார்முஸ் நீரிணை மூடல்

## பாரிய உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தும்

### ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டு


**(கொழும்பு)..........................**
**மத்திய கிழக்கில் நிலவும் போர்ச் சூழல் காரணமாக, மசகு எண்ணெய்யைத் தாண்டி உலகளாவிய உர உற்பத்தி மற்றும் விநியோகம் என்பன பாரிய சரிவைச் சந்தித்துள்ளது என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

உலகின் மொத்த உர வர்த்தகத்தில் மூன்றில் ஒரு பங்கு ஹார்முஸ் நீரிணை ஊடாகவே நடைபெறுகிறது. ஈரான் இந்த நீரிணையை மூடியுள்ளதால், கடந்த ஒரு வாரத்தில் சர்வதேசச் சந்தையில் "யூரியா" உரத்தின் விலை பீப்பாய் ஒன்றுக்கு 60 முதல் 80 டொலர்கள் வரை அதிரடியாக உயர்ந்துள்ளது.

நைட்ரஜன் உரத் தயாரிப்புக்கான முக்கிய மூலப்பொருளான இயற்கை எரிவாயுவின் விலை 30 விகிதம் அதிகரித்துள்ளமை இந்த நெருக்கடியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எம்.எம்.இஜாஸ் சுட்டிக்காட்டியது போல, இந்தியா மற்றும் பிரேசில் போன்ற நாடுகள் தங்களது உரத் தேவையில் 90 விகிதம் இறக்குமதியையே நம்பியுள்ளதால், இந்த முடக்கம் அந்நாடுகளின் விவசாயத் துறையைப் பெரிதும் பாதிக்கும்.

உர விநியோகத் தடையானது பயிர் விளைச்சலில் 20 விகிதம் முதல் 30 விகிதம் வரை வீழ்ச்சியை ஏற்படுத்தக்கூடும் என்பதால், 2026 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் உலகளாவிய ரீதியில் அத்தியாவசிய உணவுப் பொருட்களின்



தட்டுப்பாடு மற்றும் பாரிய விலை உயர்வு ஏற்படும் என அவர் எச்சரித்திருந்தார்.

குறிப்பாக, அரிசி, கோதுமை மற்றும் சோள உற்பத்தியில் இந்தத் தாக்கம் நீண்ட கால அதிர்வுகளை உண்டாக்கும் என ஆய்வாளர்கள் எதிர்வு கூறியுள்ளனர். (க-8)

# மீன்பிடிப் படகு மீட்பு!



(கொழும்பு)

தென்கடல் பகுதியில் கடற்படையினரின் விசேட நடவடிக்கையின் போது பெருமளவான ஹெரோயின் போதைப் பொருளுடன் பல நாள் மீன்பிடி படகு ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த படகில் இருந்த பொதிகள் ஹெரோயின் போதைப் பொருள் என ஆரம்பக்கட்ட விசாரணைகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக கடற்படை அறிவித்துள்ளது.

ஆழ்கடல் பகுதியில் சந்தேகத்திற்கிடமான முறையில் பயணித்த இந்த பல நாள் மீன்பிடி படகை கடற்படையினர் சோதனையிட்ட போதே குறித்த போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது. (8)

# இந்தியப் பெருங்கடல்

## அமைதி வலயமாக இருக்க வேண்டும்

### சஜித் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியப் பெருங்கடல் பிராந்தியமானது எக்காலத்திலும் அமைதி வலயமாக இருக்க வேண்டும் என்றும், அது எந்தவொரு இராணுவ மோதல்களின் ஒரு பகுதியாக மாறக் கூடாது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

இந்திய ஊடகம் ஒன்றிற்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்தியப் பெருங்கடல் பிராந்தியமானது அமைதி வலயமாகப் பலமுறை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இது எவ்விதப் பகைமை நடவடிக்கைகளும் அற்ற ஒரு பிராந்தியமாகத் தொடர வேண்டும் எனச் சுட்டிக் காட்டினார்.

இலங்கைக்கு அருகிலுள்ள சர்வதேசக் கடற்பரப்பில் ஈரானியப் போர்க்கப்பல் மூழ்கியமை மற்றும் மற்றுமொரு ஈரானியக் கப்பல் திருகோணமலைத் துறைமுகத்தில் நங்கூரமிடுவதற்கு அனுமதிக்கப்பட்டமை ஆகியவற்றைத் தொடர்ந்து பிராந்தியத்தில் பதற்றமான சூழல் நிலவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-8)

# விசேட சுற்றிவளைப்பு 568 பேர் கைது!



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 568 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், 26 ஆயிரத்து 895 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதுடன், 15 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 236 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 109 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, மது போதையில் வாகனம் செலுத்திய 282 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 56 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (8)

# கத்திமுனையில் நகை கொள்ளை; கணவன், மனைவி மீதும் தாக்குதல்

### வடமராட்சியில் சம்பவம்

(அராலி)

யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கு மணல்காடு சந்தியில் அமைந்துள்ள வீடு ஒன்றில் நேற்று அதிகாலை நகை கொள்ளை இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நேற்று அதிகாலை 1 மணியளவில் 3 திருடர்கள் மதிலால் பாய்ந்து குறித்த வீட்டுக்குள் நுழைந்துள்ளனர்.

இதன்போது வீட்டில் இருந்த நபரைத் தாக்கிவிட்டு பின்னர் அவரின் மனைவியின் கழுத்தில் கத்தியை வைத்து சுமார் 5 பவுண் நகை அவரது கழுத்திலிருந்து அறுத்து எடுக்கப்பட்டுள்ளது.

அத்தோடு திருடர்கள் குறித்த பெண்ணையும் கணவனையும் அரை மணி நேரத்திற்கு மேலாக மணல் அள்ளி கொட்டியும், இரும்பாலும் தாக்கியுள்ளனர். இதில் படுகாயமடைந்த கணவன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த வீட்டில் நேற்றுடன் மூன்றாவது தடவையாக திருட்டு சம்பவம் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகின்றது. (8-104-60)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் விக்கிரகங்கள் வழங்கி வைப்பு



(கரணவாய்)

யாழ்ப்பாணம் வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தினால் புத்தளம் சித்தி விநாயகர் ஆலயத்துக்கு 6 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான விக்கிரகங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

குறித்த விக்கிரகங்களை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது. (8-60)

# 21 ஆயிரத்து 160 ஏக்கரில் சிறுபோக நெற்செய்கை

(கிளிநொச்சி)

இரணைமடுக்குளத்தின் கீழ் இம்முறை 21 ஆயிரத்து 160 ஏக்கர் நிலப்பரப்பில் சிறுபோக நெற்செய்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இரணைமடுக்குளத்தின் சிறுபோக பயிர்ச் செய்கைக் கூட்டம் கிளிநொச்சி கனகாம்பிகை அம்பாள் ஆலய முன்றலில் மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன் தலைமையில் கடந்த 5 ஆம் திகதி நடைபெற்றது.

இதன்போது இரணைமடுக்குளத்தின் கீழான நிலப்பரப்பில் முழுமையாக பயிர்ச் செய்கை மேற்கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

அத்துடன் சிறுபோக நெற்செய்கைக்கு தேவையான உரம் உள்ளிட்ட விவசாய உள்ளீடுகளை கமநல சேவை நிலையங்கள் ஊடாக கட்டுப்படுத்தி வைத்து இருப்பதற்கான கோரிக்கையும் முன்வைக்கப்பட்டு தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. (8-316)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரி-20 உலகக்கோப்பையை தட்டித்தூக்கி மூன்றாவது முறையாக மகுடம் சூடிய பாரதம்

## போராடித் தோற்றது நியூசிலாந்து



ஐசிசிடி20 உலகக்கோப்பை 2026 இறுதிப்போட்டியில் இந்திய அணி நியூசிலாந்தை தோற்கடித்து கோப்பையை வென்றுள்ளது. இதனூடாக ரி-20 உலகக்கோப்பையில் 3ஆவது முறையாக கோப்பையை வென்ற முதல் அணி என்ற வரலாற்று சாதனை படைத்துள்ளது.

ஐசிசி ரி-20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டி குஜராத் மாநிலம்அகமதாபாத்தில்உள்ள நரேந்திர மோடி மைதானத்தில் நேற்றிரவு நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி பந்து வீச்சைத் தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 20 ஓவர் முடிவில் 5 விக்கெட் இழப்பிற்கு 255 ரன்கள் குவித்தது.

இந்திய அணியில் சஞ்சு சாம்சன் 46 பந்துகளுக்கு 89 ரன்கள் குவித்து அசத்தினார். அதே போல அபிஷேக் சர்மா 21 பந்துகளில் 52 ரன்களும் இஷான் கிஷன் 25 பந்துகளில் 54 ரன்களும் விளாசினர்.

இதனைத் தொடர்ந்து 256 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்கை நோக்கி நியூசிலாந்து அணி களமிறங்கிய நிலையில் 159 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து தோல்வியைத் தழுவியது.

இதன்மூலம் இந்திய அணி 96 ரன்கள் வித்தியாசத்தில் போட்டியில் வெற்றி பெற்று சம்பியன் பட்டத்தை வென்றுள்ளது. இந்திய அணி சார்பில் பும்ரா 4 விக்கெட்டுக்களையும் அக்சர் பட்டேல் 3 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

தோனி தலைமையில் 2007 ஆம் ஆண்டும் ரோகித் சர்மா தலைமையில் 2024 ஆம் ஆண்டும் இந்தியா ரி-20 உலகக் கோப்பையை வென்ற நிலையில் தற்போது சூர்யகுமார் யாதவ் தலைமையில் 3வது முறையாக இந்திய அணி ரி-20 உலகக் கோப்பையை வென்று ரி-20 உலகக்கோப்பையில் 3வது கோப்பை வென்ற முதல் அணி என்ற வரலாற்று சாதனை படைத்துள்ளது. (ந-7)

## காணாமல்...

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகம் விசாரணைக்குழுத் தலைவர்கள் மற்றும் குழு உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படும் முறைமைகள் குறித்து விளக்கமளிக்கும் இரண்டாவது தொகுதி பயிற்சியாளர்களுக்கான நிகழ்ச்சி நேற்று முன்தினம் இராஜகிரியவில் உள்ள காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தில் நடைபெற்றது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலகத்தின் கட்டமைப்பிற்குள் விசாரணைகளின் நோக்கங்களைப் புரிந்துகொள்வது, விசாரணைக் குழுக்களின் பங்கு காணாமல் போனோர் அலுவலகத்தால் வழங்கப்படும் நிறுவன ஆதரவு, விசாரணை செயற்பாட்டில் உள்ள படிநிலைகள், விசாரணை நடைமுறைகள் மற்றும் ஆரம்ப விசாரணை உள்ளிட்ட பல முக்கிய அம்சங்கள் குறித்து விசாரணைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.

காணாமல் போன ஆட்கள் பற்றிய அலுவலக சிரேஷ்ட அதிகாரிகள், ஆரம்ப விசாரணைக் குழுக்களின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் இந்த நிகழ்வில் பங்கேற்றனர். இந் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த நீதியமைச்சர்,

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டுக்கான அலுவலகம் மற்றும் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அலுவலகம் ஆகியன நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாடு அமைச்சின் பிரதான அலுவலகங்களாகக் காணப்படுகின்றன.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் காணாமல் போனோர் பற்றி தொடர்ச்சியாக பேசப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச நாடுகள் இந்த விடயத்தில் உன்னிப்பாக அவதானம் செலுத்தின. இருப்பினும் முறையான நடவடிக்கைகள் தேசிய மட்டத்தில் துரிதமாக முன்னெடுக்கப்படவில்லை.

காணாமல் போனோர் பற்றிய விவகாரம் தனித்துவமானது. இதற்கு அரசியல் ஒத்துழைப்பு மற்றும் நிதி ஒத்துழைப்பு போதுமானதாகக் கிடைக்கப்பெற வேண்டும். யுத்தம் முடிவடைந்ததன் பின்னர் இவ்விரு ஒத்துழைப்புக்களும் காணாமல் போனோர் அலுவலகத்துக்கு போதுமானதாகக் கிடைக்கப்பெறவில்லை.

காணாமல் போனோர் தொடர்பில் நாட்டு மக்களுக்கு வாக்குறுதி வழங்கி ஆட்சிக்கு வந்தோம். காணாமல் போனோர் விவகாரம் வடக்கு,கிழக்கு, தெற்கு என சகல மாகாணங்களுக்கும் விரிவாக்கப்பட்டதொரு பிரச்சினையாகவே காணப்படுகிறது.

எவருக்கும் நாங்கள் எவ்விடத்திலும் சிறப்பு சலுகை வழங்கவில்லை. உண்மையை வெளிக்கொண்டு வரவும் நீதியை நிலைநாட்டவும் சட்டத்தின் பிரகாரம் செயற்படுகிறோம். பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக இரத்துச் செய்யப்படும். மனித உரிமைகள் மற்றும் [illegible] பாதுகாக்கும் வகையில் புதிய சட்டம் இயற்றப்படும்.

நாட்டில் இனவாதம் மற்றும் பிரிவினைவாதத்துக்கு இனியொரு போதும் இடம் கிடையாது. இனவாதத்தால்தான் 30 வருடகால யுத்தம் தோற்றம் பெற்றது. அதன் தாக்கங்களும் இன்றளவில் தொடர்கின்றன. யுத்தம் அல்லது வேறேதும் காரணிகளால் ஒரு குடும்பத்தின் உறுப்பினர் காணாமலாக்கப்பட்டால் அந்தக் குடும்பத்துக்கு இழப்பீடு வழங்கி அவர்களை திருப்திப்படுத்த முடியாது.

காணாமல் போனோரின் உறவுகளின் வலி மற்றும் உணர்வுகளை எம்மால் விளங்கிக் கொள்ள முடியும். வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்குச் செல்கையில் எம்மால் இதனை உணர முடிகிறது. அவர்களுடன் உரையாடும் போது "எமது உறவுகளுக்கு என்னவாயிற்று, எப்போது வருவார்கள்" என்று தான் கேட்கிறார்கள்.

கடந்த கால அரசியல் காரணிகளால் காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் மீது நம்பிக்கையின்மை காணப்பட்டது. ஆனால் தற்போது அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளது.மக்களின் நம்பிக்கையுடன் ஆட்சிமாற்றம் ஏற்பட்டுள்ளது. நிலைமையும் மாற்றமடைந்துள்ளது. தற்போது கட்டம் கட்டமாகக் காணிகள் விடுவிக்கப்படுகின்றன.

வலிந்து காணாமலாக்கபட்டவர்களின் உறவுகளில் பெரும்பாலானோர் இழப்பீடு கோரவில்லை. நீதியைக் கேட்கிறார்கள்.தமது தந்தை, தாய், சகோதரர்கள் மற்றும் பிள்ளைகளுக்கு நேர்ந்தது என்ன?, நீதி எங்கே என்றே கேட்கிறார்கள். அது நியாயமானதே. மனித புதைகுழிகள் அகழ்வு மற்றும் அடுத்தகட்ட விசாரணைகளுக்குத் தேவையான நிதி நீதிமன்றத்தின் உத்தரவு ஊடாக விடுவிக்கப்பட்டுள்ளன. உண்மை வெளிவர வேண்டும். நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்ற வெளிப்படையான நிலைப்பாட்டில் இருந்து கொண்டு அரசாங்கம் செயற்படுகிறது.

காணாமல் போனோர் பற்றிய அலுவலகத்தின் செயற்பாட்டையும் அதன் ஊழியர்களின் சேவையையும் உச்ச அளவில் எதிர்பார்க்கிறோம். நடைமுறைக்கு சாத்தியமான வகையில் காணாமல் போனோர் பற்றிய அலுவலக உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கிறார்கள்.

தள்ளாடும் வயதில் உள்ள பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்காக எதிர்பார்த்துள்ளார்கள். இதுவொரு தனித்துவமானதொரு விடயம் என்பதை அனைவரும் விளங்கிக்கொள்ள வேண்டும். காணாமல் போனோர் பற்றிய விவகாரம் உணர்வுபூர்வமானது என்பதை விளங்கிக் கொண்டு விசாரணை நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

காணாமல் போனோர் பற்றிய விவகாரத்தை உணர்வுபூர்வமாக பார்க்க வேண்டும். தேவையான வளங்களை நாங்கள் வழங்குகிறோம். இந்த விடயத்தில் அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது என்றார். (ந-7

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடுமையான வெப்பம்

## அதிகளவு நீர் அருந்துங்கள்

### வளிமண்டலவியல் திணைக்களம்

(கொழும்பு)

**நாடு முழுவதும் தற்போது நிலவி வரும் கடும் வெப்பமான காலநிலை எதிர்வரும் மே மாதம் வரை தொடரக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.**

சப்ரகமுவ, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களிலும், கொழும்பு, கம்பஹா, வவுனியா, மன்னார், அம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை ஆகிய மாவட்டங்களில் அதிகமான வெப்பநிலை நிலவக் கூடும்.

அதிகரித்து வரும் இந்த வெப்பத்தினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்துக் கொள்ள, அதிகளவு நீர் அருந்துதல் மற்றும் நிழலான இடங்களில் தங்கியிருத்தல், வெள்ளை அல்லது மென்மையான நிறத்திலான ஆடைகளை அணிதல், முதியவர்கள் மற்றும் சிறுவர்கள் குறித்து விசேட அவதானம் செலுத்துதல், இயன்றவரை கடுமையான வெளிவேலைகளில் ஈடுபடுவதைத் தவிர்த்தல் ஆகிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுக்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் பொதுமக்களைக் கேட்டுக் கொண்டுள்ளது. (8)

## உலருணவுப் பொதிகள் வழங்கல்

(பச்சிலைப்பள்ளி)

ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் ஏற்பாட்டில் நோன்புப்பெருநாளை முன்னிட்டு பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகப் பிரிவில் நிரந்தரமாக வசிக்கும் முஸ்லிம் அன்பர்களுக்கு உலருணவுப்பொதிகள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் ஸ்ரீசத்திய சாயி சேவா நிலையத்தின் மானிப்பாய் கிளையின் தலைவர் வசந்தசேனன் பச்சிலைப் பள்ளி பிரதேச ஸ்ரீசத்தியசாயி சேவா நிலையத்தின் தலைவர் திருமதி மேனகா ஆகியோர் கலந்து கொண்டு உலருணவுப்பொதிகளை வழங்கி வைத்தனர்.

இதில் கிராமமட்ட அலுவலர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.(8)

## நீரில் அடித்து செல்லப்பட்ட யுவதி மீட்பு



(கொழும்பு)

கித்துல்கலை - லியன்லோயா பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்ட இளம் யுவதி ஒருவர் பாதுகாப்பாக மீட்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை இந்த சம்பவம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் நேர்ந்த போது பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸ் உயிர்காப்பு பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளால் குறித்த பெண் மீட்கப்பட்டு அடிப்படை முதலுதவி வழங்கப்பட்டுள்ளது.

மீட்கப்பட்டவர் பெந்தோட்டை பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய இளம் பெண் என தெரியவந்துள்ளது. (8)

## கடும் வெப்பத்தால் குறையும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டம்

(கொழும்பு)

மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கடும் வெப்பமான வானிலை நிலவுகிறது. இதன் காரணமாக மலையகப் பகுதியில் உள்ள அனைத்து நீர்த்தேக்கங்களின் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது.

தொடர்ந்து இவ்வாறான காலநிலை நிலவும் பட்சத்தில் மத்திய மலைநாட்டில் சுத்தமான தண்ணீர் தட்டுப்பாடு ஏற்படும் அபாயமும் உள்ளது. கடந்த சில நாட்களாக மத்திய மலைநாட்டில் உள்ள அனைத்து நீர்த்தேக்க பகுதியில் உள்ள பற்றைகளுக்கும் சிறு சிறு வனப் பகுதிகளுக்கும் விஷமிகள் தீ வைத்ததின் காரணமாக நீர் ஊற்றுகள் வற்றி வறண்டு போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த நிலை தொடர்ந்தால் நாட்டில் நீர் மின் உற்பத்தி வீழ்ச்சி கண்டு மின் துண்டிப்பு ஏற்படும் அபாயமும் உள்ளது என தெரிவிக்கப்படுகின்றது. (8)

## கஞ்சா இலைகள் மீட்பு



(கொழும்பு)

மாரவில கடற்பரப்பில் கடற்படையினர் முன்னெடுத்த விசேட சோதனை நடவடிக்கையின் போது 953 கிலோகிராம் கஞ்சா இலைகள் அடங்கிய பொதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கடலில் கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட 27 சந்தேகத்திற்கிடமான மூடைகளை கடற்படையினர் சோதனையிட்ட போதே இந்தத் தொகுதி கண்டுபிடிக்கப்பட்டது.

கடற்படையினரின் தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகள் காரணமாக, பிடிபடுவதைத் தவிர்க்க கடத்தல்காரர்கள் இதனை கடலில் வீசிச் சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

கைப்பற்றப்பட்ட அனைத்து கஞ்சா இலைகளும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக சுங்கத் தடுப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. (8)

## வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் இளைஞர் ஒருவர் கைது!

(கொழும்பு)

வெளிநாட்டிலிருந்து சட்டவிரோதமான முறையில் நாட்டுக்குள் கொண்டுவரப்பட்ட பெருந்தொகையான சிகரெட்டுகளுடன் சந்தேகநபர் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்றுஞாயிற்றுக்கிழமை அதிகாலை விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபரிடமிருந்து 34ஆயிரம் வெளிநாட்டு சிகரெட்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீர்கொழும்பு பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## அறுவடை இயந்திரத்தை ஏற்றிச்சென்ற இளம் குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டம், காரைதீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடிப்பள்ளி வளைந்த வட்டப் பகுதியில், அறுவடை இயந்திரத்தை ஏற்றிச் சென்ற உழவு இயந்திரத்தின் சாரதி நேற்று முன்தினம் மதியம் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர் அம்பாறை, நவகம்புர - உதயபுர பகுதியைச் சேர்ந்த 39 வயதுடைய கோரகே தொன் சானக சதுரங்க குமார என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்த நபர் அறுவடை இயந்திரத்தை உழவு இயந் திரத்தில் ஏற்றிச் சென்று கொண்டிருந்த போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

சடலமாக மீட்கப்பட்டவரின் முகப்பகுதி சிறிது சிதைந்த நிலையில் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்தவருக்கு நீண்டகாலமாக வலிப்பு நோய் இருந்ததாக ஆரம்பக்கட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. எனினும், உயிரிழப்பிற்கான உண்மையான காரணம் குறித்து காரைதீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (8)


## மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் 4 இலங்கையர்கள் காயம்

(கொழும்பு)

மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் காரணமாக இதுவரையில் நான்கு இலங்கையர்கள் காயமடைந்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளதாக வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், அவர்கள் நால்வரும் தற்போது சிகிச்சையின் பின்னர் வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.


தற்போதைய சூழ்நிலையில் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பிற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து செயற்படுவதாகவும், தூதரகங்கள் ஊடாக இது தொடர்பில் தொடர்ச்சியாகக் கண்காணிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். (8)



பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நேற்று முன்தினம் சனிக்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்றது.

(படம்:மகாலிங்கம்)

## போதை மாத்திரைகளுடன் 4 இளைஞர்கள் கைது



(வவுனியா)

போதை மாத்திரைகளுடன் வவுனியாவில் நான்கு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

வவுனியா மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து வவுனியாவில் நேற்றுக் காலை மேற் கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கையின் போது 4 இளைஞர்கள் போதை மாத்திரைகளுடன் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து 500 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரத் தொழிற்சாலையில் பாரிய தீ விபத்து



(கொழும்பு)

கண்டி - அக்குரணை 07 சந்தி பகுதியில் அமைந்துள்ள மரத்தொழிற்சாலையில் நேற்றைய தினம் பாரிய தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தைக் கட்டுப்படுத்துவதற்காக கண்டி தீயணைப்பு பிரிவினர் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று தீயை அணைக்கும் பணிகளில் ஈடுபட்டனர்.

இவ் விபத்தால் வர்த்தக நிலையத்திற்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

விபத்திற்கான காரணம் இதுவரை வெளிவராத நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (8)

## பெருமளவான தென்னை மரங்கள் காட்டு யானைகளால் அழிப்பு!




கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட யூனியன் குளம் கோணாவில் அக்கராயன் ஆகிய பகுதிகளில் கடந்த சில நாட்களாக காட்டு யானைகள் புகுந்து நூற்றுக்கும் மேற்பட்ட பயன் தரு தென்னை மரங்களை அழித்துள்ளன.

நேற்று முன்தினம் இரவும் இப்பகுதிகளில் மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த யானைகள் 25 இற்கும் மேற்பட்ட தென்னை மரங்களை அழித்து நாசம் செய்துள்ளன

இதனால் தங்களுடைய வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாக அப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இதேவேளை யூனியன் குளம் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அச்சம் காரணமாக 25 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களுடைய வாழ்விடங்களை விட்டு இடம் பெயர்ந்து வேறு இடங்களில் தங்கி உள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். (8-315)


## போதைப்பொருட்களுடன் 981 பேர் கைது

(கொழும்பு)

நாட்டில்போதைப் பொருளை தடுக்கும் நோக்கிலான "முழு நாடுமே ஒன்றாக" எனும் தேசிய திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் சனிக்கிழமை முன்னெடுக்கப்பட்ட சோதனை நடவடிக்கைகளில் சுமார் 981 பேர் போதைப்பொருட்களுடன் கைதுசெய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன், தடுப்புக்காவல் உத்தரவு பெற்ற 09 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், சட்டவிரோத சொத்துக்கள் தொடர்பான விசாரணைகளுக்கமைய 11 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதேவேளை, 989 சோதனைகள் நடத்தப்பட்டுள்ளதுடன், 13 பேர் புனர்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பி வைக்க பரிந்துரைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கைகளின்போது சிக்கிய சந்தேகநபர்கள் வைத்திருந்த போதைப்பொருட்களையும் இதன்போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (8)



ரம்ழான் பண்டிகை கால சிறப்பு தொழுகை வழிபாடுகளும் நோன்பு திறப்பு நிகழ்வும் பருத்தித்துறையில் உள்ள பள்ளிவாசலில் இடம்பெற்று வருகிறது. (படம்:மகாலிங்கம்)

## சந்நிதியான் ஆச்சிரமத்தால் உதவி

(கரணவாய்)

வடமராட்சி தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் வாராந்தம் நடத்தப்படும் நிகழ்வில் முதியோர்கள் கௌரவிப்பு விழா நிகழ்வுக்காக கோண்டாவில் முதியோர் சங்கத்துக்கு 35 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டது. (8-60)



வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களமும் யாழ்ப்பாணப் பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய டிப்ளோமா மாணவிகளின் மனைப்பொருளியல் கண்காட்சி கடந்த 5 ஆம் திகதி வியாழக்கிழமை குருநகர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.

## பனைமரங்களை கடத்திய மூவர் கைது!



(தருமபுரம்)

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி பகுதியில் அதிகளவான பனை மரங்களை கடத்த முற்பட்ட மூவர் பொலிஸாரால் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்

குறித்த பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமான முறையில் பனைமரங்கள் அழிக்கப்பட்டு வெளி இடங்களுக்கு கடத்தப்படுவதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைக்கப் பெற்றது. இதனடிப்படையில் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலை அடுத்து குறித்த பகுதி சுற்றி வளைக்கப்பட்டது.

குறித்த சுற்றிவளைப்பில் அனுமதிப்பத்திரம் இன்றி கடத்துவதற்காக மறைத்துவைக்கப்பட்ட பனை மரங்களை கண்டறிந்ததுடன் அதனுடன் தொடர்புடைய மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.(8-316)

## கைக்குண்டுகள் மீட்பு!

(கொழும்ப)

திருகோணமலையில் வீடொன்றின் கூரையிலிருந்து இரண்டு கைக்குண்டுகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டை பழுது பார்க்க சென்றபோது வீட்டின் உரிமையாளரால் வீட்டு கூரைக்கு மேல் கைக்குண்டுகள் இருப்பதாக பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது. இதனை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 கைக்குண்டுகளைக் மீட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த கைக்குண்டை நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் செயல் இழக்க செய்ததாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (8)

## காட்டு யானை தாக்கியதில் ஒருவர் பரிதாபமாக உயிரிழப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு செங்கலடி - பதுளை வீதியில் சின்னப் புல்லுமலை கிராமத்தில் காட்டு யானை தாக்கியதில் 59 வயதுடைய நபர் ஒருவர் நேற்றைய தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சின்னப்புல்லு மலை கிராமத்தில், தோட்டத்தில் தங்கி வேலை செய்யும் குறித்த நபர் வழமைபோல் தோட்டத்தின் வாடியில் உறங்கிக் கொண்டிருந்தவேளை குறித்த இடத்துக்கு வந்த காட்டு யானை வாடியை உடைத்துள்ளது.

உறக்கத்திலிருந்து விழித்து வாடியிலிருந்து தப்பி ஓடிய போது யானை அவரை துரத்தி தாக்கியுள்ளது. தாக்கியதில் அவர் நிலத்தில் விழுந்தபோது முகத்தில் காலால் மிதித்துள்ளது. யானையின் தாக்குதலில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.


இச் சம்பவம் குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)

## 20 இலட்சம் ரூபா பெறுமதியான தேக்கு மரக்குற்றிகள் பறிமுதல்

(சாவகச்சேரி)

வன்னி பகுதியில் இருந்து தேக்குமரக் குற்றிகளை சட்டவிரோதமாக ஏற்றிவந்த பாரவூர்தியை சாவகச்சேரி பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையின் கீழ் இயங்கும் போதைப்பொருள் மற்றும் குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் புத்தூர் சந்தி பகுதியில் இருந்து குறித்த பாரவூர்தியை பின்தொடர்து சென்று மீசாலை பகுதியில் உள்ள மரக்காலை ஒன்றில் மரக்குற்றிகளை இறக்க தயாரான போது கைப்பற்றியதுடன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.



20 இலட்சத்திற்கும் அதிக பெறுமதியான 52 தேக்குமரக்குற்றிகளுடன் குறித்த பாரவூர்தியை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாகவும் குறித்த பாரவூர்தி நீண்ட நாட்களாக சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் சாவகச்சேரி பொலிஸார் தெரிவித்தனர். (8-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அஸ்வெசும கொடுப்பனவு!

# தகவல்களைப் புதுப்பிக்கும் பணிகள் முன்னெடுப்பு

## நலன்புரி நன்மைகள் சபை

**(கொழும்பு)**

**அஸ்வெசும திட்டத்தின் கீழ் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளில் விண்ணப்பித்த, நலன்புரி கொடுப்பனவை பெறுவோர் மற்றும் பெறாதோரின் தகவல்களைப் புதுப்பிக்கும் பணிகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.**

நலன்புரி நன்மைகளைப் பெறும் நபர்களின் பெயர் பட்டியலை வருடாந்தம் புதுப்பிப்பது கட்டாயம் என்பதால் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இதற்கு தகுதியுடைய 29 இலட்சத்து 93 ஆயிரத்து 558 நபர்கள் ஏற்கனவே தமது தகவல்களை சமர்ப்பித்துள்ளனர்.

இந்தநிலையில், அவர்களின் தகவல்களை உறுதிப்படுத்தும் மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் தற்போது நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்புப் பணிகள் எதிர் வரும் 28 ஆம் திகதியுடன் நிறைவடைய உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கணக்கெடுப்பு உத்தியோகத்தர் வீட்டிற்கு வரும் போது, தேவையான ஆவணங்களைச் தயாராக வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து உறுப்பினர்களினதும் தேசிய அடையாள அட்டைகள், கடந்த 3 மாதங்களுக்கான மின்சாரப் பட்டியல்கள், காணி உறுதிப்பத்திரங்கள், வாகன உரிமைப்பத்திரம் மற்றும் மருத்துவச் சான்றிதழ்கள் போன்ற ஆவணங்களை உத்தியோகத்தர்களிடம் சமர்ப்பிக்கத் தயாராக வைத்திருக்குமாறு கோரப்பட்டுள்ளது. (8)

## கடலில் மூழ்கிய பாரிய வள்ளம்!



(கொழும்பு)

அம்பாறை சாய்ந்தமருதில் ஆழ் கடலில் மீன்பிடிக்க செல்வதற்கு தயாராக இருந்த வள்ளம் கடலில் மூழ்கியுள்ளது.

சாய்ந்தமருது நடுத்துறை என்னும் இடத்தில் இருந்து வழமையாக கடலுக்குச் செல்வது வழக்கமாக இருந்த நிலையில் மீன் பிடி நடவடிக்கைக்காக தயார் நிலையில் வைத்திருந்த 40 அடி நீளமான வள்ளம் நேற்று காலை கடலில் மூழ்கி காணப்பட்டது.

இதன் பெறுமதி 1 கோடி 30 இலட்சம் எனத் தெரியவருகிறது. (8)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறை மாணவர்களால் தயாரிக்கப்பட்ட சஞ்சிகை "கனலி" - இதழ் 6 வெளியீடும், குறுந்திரைப்பட விழாவும் கடந்த வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

(படம்:சிவசாந்தன்)

# மரண அறிவித்தல்



**தோற்றம்**
**08.04.1949**

**மறைவு**
**07.03.2026**

## கந்தையா ஏகாம்பரம்

**(ஓய்வு பெற்ற சாரதி UNHCR)**

புறாடி ஒழுங்கை, அரியாலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா ஏகாம்பரம் அவர்கள் 07.03.2026 சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-செல்வமுத்து தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-செல்லம்மா தம்பதியினரின் அன்பு மருமகனும், ஜெயராணியின் அன்புக் கணவரும், காந்தயுபன், கௌசிகா, நிரோஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், மீரா, மயூரன், சாலினி ஆகியோரின் அன்பு மாமனாரும், மாசிலன், சாகித்தியன், நித்திலன், தனுஜன், சாருஜன், நிஷானி, நிலுசா, வேலன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும், காலஞ்சென்றவர்களான சண்முகலிங்கம் துரைராஜா, தவமணி, சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 09.03.2026 இன்று திங்கட்கிழமை காலை 10 மணியளவில் இல 02, புறாடி ஒழுங்கை, அரியாலையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

*தகவல் : குடும்பத்தினர்*

இல 02, புறாடி ஒழுங்கை,
அரியாலை, யாழ்ப்பாணம்.

077 691 3160,
077 504 0118

(7004)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நேபாளத்தில் தோல்வியுற்ற பாரம்பரிய அரசியல்!

### பிரபல ராப் பாடகர் வரலாற்று வெற்றி



(காத்மண்டு)

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்று முடிந்த பொதுத்தேர்தலில், அந்நாட்டின் முன்னாள் பிரதமர் சர்மா கே.பி. ஒலியை வீழ்த்தி, 35 வயதான பிரபல பாடகர் பலேந்திர ஷா பாரிய வெற்றியைப் பதிவு செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கடந்த ஆண்டு நேபாளத்தில் "Z தலைமுறையினரால்" முன்னெடுக்கப்பட்ட பாரிய மக்கள் போராட்டத்தின் ஊடாக அப்போதைய அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

அதன் பின்னர் இடம்பெற்ற முதலாவது பொதுத்தேர்தல் இது என்பதால் உலக நாடுகளின் கவனம் இதன்மீது திரும்பியிருந்தது.

முன்னாள் பிரதமர் சர்மா ஒலி நீண்டகாலமாகப் பிரதிநிதித்துவப்படுத்திய அவரது சொந்த பாராளுமன்றத் தொகுதியிலேயே, அவரை எதிர்த்துப் போட்டியிட்ட பலேந்திர ஷா அபார வெற்றி பெற்றுள்ளார்.

ஒரு மூத்த அரசியல் தலைவரை, இளைஞர் ஒருவர் அதுவும் கலைத்துறையைச் சேர்ந்த ஒருவர் தோற்கடித்தமையானது நேபாள அரசியலில் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க மாற்றமாகக் கருதப்படுகிறது.

பாரம்பரிய அரசியல்வாதிகளுக்குப் பதிலாகத் தற்கால இளைஞர்களின் கைகளில் அதிகாரம் செல்ல வேண்டும் என்ற நேபாள மக்களின் தற்போதைய மனநிலையை இந்தத் தேர்தல் முடிவு பிரதிபலிப்பதாக அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (3)

## ஈரானின் தலைமை முடக்

## பேச்சுவாரத்தைக்கு

## ட்ரம



(வோஷிங்டன்)
ஈரானின்
அதிகாரத்தில்
முற்றிலுமாக அ
போர் நிறுத்த
அமெரிக்க ஜன
தெரிவித்துள்ளா

ஈரான் மீதான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், அந்த நாட்டுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் தமக்கு விருப்பமில்லை என்றும், ஈரானின் இராணுவம் மற்றும் தலைமைத்துவம் முழுமையாக முடக்கப்படும் வரை போர் ஓயாது என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

"ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் எனக்கு ஆர்வம் இல்லை" என்று ஏர் ஃபோர்ஸ் ஒன் விமானத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய போதே ட்ரம்ப் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் சாத்தியமான அனைத்துத் தலைவர்களும் கொல்லப்பட்டு, அந்த நாட்டின்

## குவைத் வானூர்தி நிலையம் மீது தாக்குதல்; எரிபொருள் தாங்கிகள் தீக்கிரை

(குவைத்)

குவைத் சர்வதேச வானூர்தி நிலையத்தில் உள்ள எரிபொருள் தாங்கிகள் மீது ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது எரிபொருள் தாங்கிகள் தீக்கிரையாகியுள்ளன.



குவைத் சர்வதேச விமான நிலையத்தில் அமைந்துள்ள எரிபொருள் தாங்கிகள் மீது ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக குவைத் அரசாங்கம் அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

நேற்று அதிகாலை வானூர்தி நிலைய வளாகத்தில் உள்ள எரிபொருள் களஞ்சிய முனையத்தை இலக்கு வைத்து இந்த ஆளில்லா வானூர்தி தாக்குதல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தாக்குதலினால் ஏற்பட்ட தீயைக் கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினரும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் சம்பவ இடத்தில் தீவிரமாகப் பணியாற்றி வருவதாக குவைத் அரசாங்கம் தனது எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கில் ஈரான் - அமெரிக்கா இடையிலான போர் தீவிரமடைந்துள்ள நிலையில், அமெரிக்கப் படைகள் பயன்படுத்தும் முக்கிய விநியோகப் புள்ளிகளில் ஒன்றான குவைத் வானூர்தி நிலையம் இலக்கு வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (3)

## போர்க்களமாகும் மத்தி

## இஸ்ரேல் - ஈரான் இ

## நேரடித் தாக்குதல்க

இஸ்ரேல் மற்றும் ஈரான் ஆகிய நாடுகளுக்கு இடையே நேரடித் துப்பாக்கி சூடுகள் மற்றும் ஏவுகணைத் தாக்குதல்கள் தீவிரமடைந்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதன் காரணமாக வடக்கு இஸ்ரேல், ஜெருசலேம் மற்றும் டெல் அவிவ் ஆகிய பகுதிகளில் அபாய எச்சரிக்கை ஒலிகள் எழுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அண்டை நாடுகளின் வான்பரப்பு மற்றும் நிலப்பரப்பு தன் மீது தாக்குதல் நடத்தப் பயன்படுத்தப்படாத வரை, பதற்றத்தைக் குறைக்கத் தாம் தயாராக இருப்பதாக ஈரான் தெரிவித்திருந்தது.

எனினும், வளைகுடா தளங்களிலிருந்து அமெரிக்கா தாக்குதல் நடத்தியதால், அந்த வாய்ப்பை ஜனாதிபதி ட்ரம்ப் பாழாக்கி விட்டதாக ஈரான் பின்னர் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், ஈரானின் இராணுவத் திறனை அமெரிக்கத் தாக்குதல்கள் கணிசமாகச் சேதப்படுத்தியுள்ளதாக ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

ஈரான் மீதான அமெரிக்கா வின் வான்வழித் தாக்குதல்களுக்கு பிரித்தானியாவின் வான் படைத் தளங்களைப் பயன்படுத்தப் பிரதமர் சேர் கீர் ஸ்டார்மர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, 24 ஏவுகணைகளைச் சுமந்து செல்லக்கூடிய அமெரிக்காவின் பிரம்மாண்டமான டீ-1 Lancer போர் வானூர்தி பிரித்தானியாவின் RAF Fairford தளத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...டக்கப்படும் வரை ...இடமில்லை!
## ...ரம்ப் அதிரடி

...ர்)

**இராணுவம் மற்றும் ... மீதமுள்ள தலைமைகளும் அழிக்கப்பட்டால் மாத்திரமே ...த்தம் சாத்தியமாகுமென ...னாதிபதி டொனல்ட் ட்ரம்ப் ...ார்.**

இராணுவம் முழுமையாக அழிக்கப்பட்டால் மாத்திரமே போர் நிறுத்தம் சாத்தியமாகும் என்றும் இல்லையேல் பேச்சு வார்த்தை என்ற பேச்சுக்கே இடமிருக்காது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அமெரிக்க இராணுவத் தளம் மீது ஆளில்லா வானூர்தி தாக்குதல் நடத்தியதாக ஈரானின் புரட்சிகர காவற்படை உரிமை கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.(3)


## ...திய கிழக்கு ... இடையே ...ள் தீவிரம்

தரையிறங்கியுள்ளது.

ஈரானிலிருந்து ஏவப்பட்ட கண்டம் விட்டு கண்டம் பாயும் ஏவுகணைகள் மற்றும் குரூஸ் ஏவுகணைகள் தமது நிலப்பரப்பை இலக்கு வைத்ததாக கட்டார் உறுதிப்படுத்தியுள்ளது.

லெபனானின் பெக்கா பள்ளத்தாக்கில் உள்ள நபி சித் நகரில் இஸ்ரேலியப் படைகள் நடத்திய தாக்குதலில் குறைந்தது 41 பேர் கொல்லப்பட்டதை பிரதமர் நெதன்யாகு உறுதிப்படுத்தி யுள்ளார். அத்துடன் பெய்ரூட்டின் ஹாரெட் ஹ்ரிக் பகுதியில் இஸ்ரேல் மிகக் கொடூரமானத் தாக்குதல்களை நடத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.


இதற்கிடையில், வடக்கு இஸ்ரேல் மற்றும் லெபனான் எல்லைக்கு அருகில் உள்ள இஸ்ரேலியப் படைகளைக் குறிவைத்து நேற்று தாக்குதல்களை நடத்திய தாக ஹிஸ்புல்லா அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (3)



## ஏவுகணைத் தாக்குதலுக்காக மன்னிப்புக் கோரிய ஈரானிய ஜனாதிபதி

(டெஹ்ரான்)

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் கூட்டுத் தாக்குதல்களுக்குப் பதிலடியாக வளைகுடா நாடுகள் மீது ஈரான் நடத்திய தாக்குதல்கள் தொடர்பில், ஈரானிய ஜனாதிபதி மசூத் பெசெஷ்கியான் அந்த நாடுகளிடம் உத்தியோகபூர்வமாக மன்னிப்பு கோரியுள்ளார்.



ஈரானிய அரச தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட விசேட வீடியோ செய்தியிலேயே ஜனாதிபதி பெசெஷ்கியான் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார். வளைகுடா நாடுகள் மீது தாக்குதல் நடத்தும் நோக்கம் ஈரானுக்கு கிடையாது என அவர் இதன் போது திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையை நிலைநாட்ட அனைத்து நாடுகளும் ஒத்துழைக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார். அத்துடன், அண்டை நாடுகளிலிருந்து ஈரானுக்கு எதிராகத் தாக்குதல்கள் முன்னெடுக்கப்படாத பட்சத்தில், ஈரான் ஒரு போதும் அந்த நாடுகள் மீது தாக்குதல்களைத் தொடுக்காது எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

"இனிவரும் காலங்களில், முதலில் எமது நாடு தாக்கப்படாத வரை, அண்டை நாடுகள் மீது தாக்குதல் நடத்த வேண்டாம்" என்ற தீர்மானத்தை ஈரானின் இடைக்கால தலைமைத்துவம் எடுத்துள்ளதாக ஜனாதிபதி பெசெஷ்கியான் தனது உரையில் குறிப்பிட்டுள்ளார்.

சமீபகாலமாக வளைகுடா பிராந்தியத்திலுள்ள விமான நிலையங்கள் மற்றும் வர்த்தக மையங்கள் மீது ஈரான் ஏவுகணை மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியிருந்த நிலையில், ஜனாதிபதியின் இந்த அறிவிப்பு பிராந்தியத்தில் நிலவும் பதற்றத்தைத் தணிக்கும் ஒரு முயற்சி யாகப் பார்க்கப்படுகிறது. (3)

## ஈரானுக்கு எதிரான போர் தொடரும்; இஸ்ரேல் பிரதமர் அதிரடி


(ஜெருசலேம்)

ஈரானுடன் முழு பலத்துடன் போரை தொடருவோம் என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சபதம் விடுத்துள்ளார்.

இது குறித்து தொலைக்காட்சி சேனலுக்கு பெஞ்சமின் நெதன்யாகு அளித்த பேட்டியில் இஸ்ரேலும், ஈரானும் மீண்டும் உண்மையான நண்பர்களாக மாறும். இதற்கான தருணம் நெருங்கி வருகிறது. ஈரானுடன் முழு பலத்துடன் போரை தொடருவோம். மோதலின் அடுத்த கட்டம் இன்னும் பல ஆச்சரியங்களை ஏற்படுத்தும் எனத் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில்,

இஸ்ரேலுக்கும், ஈரானுக்கும் இடையே அமைதியைக் கொண்டு வரும். அயதுல்லா கமேனியின்



ஆட்சி முழு உலகிற்கும் ஆபத்தை ஏற்படுத்தியது என்பதை அனைவரும் புரிந்துகொள்கிறார்கள். ஈரான் 12 அண்டை நாடுகளை தாக்கியுள்ளது. நாங்கள் ஈரான் தாக்குதலால் பாதிக்கப்பட்ட நாடுகளுக்கு ஆதரவாக இருப்போம்.

அத்துடன், மோதல்கள் விரிவடைந்து வருவதால் பல நாடுகள் இப்போது இஸ்ரேலுடன் நெருக்கமாக பணியாற்றி வருகிறது.


பல நாடுகள் இப்போது ஒத்துழைப்புக்காக எங்களை அணுகி வருகின்றன. அத்துடன் இஸ்ரேல் இப்போது ஈரான் வான்வெளியை கிட்டத்தட்ட முழுமையாகக் கட்டுப்படுத்தியுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை புனரமைத்து தருமாறு பொது மக்கள் கோரிக்கை

**(முரசுமோட்டை)**

**கிளிநொச்சி தருமபுரம் உப அஞ்சல் அலுலகத்திற்கு செல்லும் வீதியை புனரமைத்து தருமாறு அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**



(முரசுமோட்டை)

ஏ35 பரந்தன் முல்லை வீதியில் இருந்து தருமபுரம் சந்தை, உப அஞ்சல் அலுவலகத்திற்கு செல்லும் வீதி மிகவும் சீர் அற்ற நிலையில் காணப்படுகின்றது.

மழை காலங்களில் இவ் வீதியூடாக பெரும் சிரமத்தின் மத்தியிலேயே பயணிக்க வேண்டியுள்ளது. அத்துடன் விபத்துக்களும் ஏற்படுகின்றன. முதியோர், நோயாளிகள், மீனவர்கள் என பலரும் இவ்வீதியூடாக பயணம் செய்கின்றனர்.

எனவே குறித்த வீதியை புனரமைப்புச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-312)

# 13 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிப்பு!

(மன்னார்)

மன்னாரில் உணவகங்கள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட ஆய்வு நடவடிக்கையின் போது உரிய சுகாதார நடைமுறைகளை பின்பற்றாத வர்த்தக நிலையம் ஒன்றின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

காலாவதியான உணவு பொருட்களை காட்சிப்படுத்தியமை, அழுகிய மரக்கறி பழங்களை காட்சிப்படுத்தியிருந்தமை, உணவு பொருட்களை உரிய வகையில் களஞ்சியப்படுத்தாமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் குறித்த வர்த்தக நிலையம் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வர்த்தக நிலையத்தின் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் வர்த்தக நிலையத்திற்கு எதிராக ஒரு இலட்சம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டதுடன், கைப்பற்றப்பட்ட உணவு பொருட்களையும் உடனடியாக அழிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந் நிலையில் 13 இலட்சம் ரூபா பெறுமதியான உணவுப் பொருட்கள் அழிக்கப்பட்டன. (8-285)

## மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

யா/ ஊரெழு கணேச வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் இரா.ஜெயக்குமார் தலைமையில் இடம்பெறும் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி.மாலதி முகுந்தன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (8)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 300 | 200 | 300 | 300 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 160 | 240 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 | 350 |
| தக்காளி | 100 | 80 | 100 | 150 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 180 | 200 | 200 |
| கோவா | 100 | 80 | 200 | 200 |
| கரட் | 250 | 430 | 400 | 400 |
| பூசணி | 120 | 120 | 150 | 150 |
| புடோல் | 150 | 150 | 100 | 150 |
| வாழைக்காய் | 180 | 180 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 300 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 180 | 180 | 180 | 200 |
| பாகற்காய் | 400 | 450 | 500 | 400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 300 | 300 | 300 | 400 |
| பயற்றங்காய் | 300 | 450 | 400 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 300 | 320 |
| பீற்றூட் | 100 | 80 | 200 | 150 |
| கறிமிளகாய் | 300 | 300 | 400 | 300 |
| முருங்கைக்காய் | -- | 4000 | 2000 | 2500 |
| போஞ்சி | 300 | 250 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 150 | 250 | 250 |
| கீரை - 1 பிடி | 140 | 70-140 | 150 | 150 |
| தேசிக்காய் | 200 | 200 | 100 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 160 | 80 | 100-150 |
| இராசவள்ளி | 400 | 400 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 150 | 100 | 200 | 200 |
| முள்ளங்கி | 100 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 100 | 80 |
| வல்லாரை | 60 | 70 | 80 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 160 |

# இராசிபலன்

09.03.2026
மாசி 25, திங்கட்கிழமை
சஷ்டி முன்னிரவு 11.41 மணிவரை
விசாகம் பிற்பகல் 4.29 மணிவரை

சுப நேரம் 12.24-1.54 மணிவரை
இராகு காலம் 7.54-9.24 மணிவரை

சந்திராஷ்டமம்
ரேவதி, அச்சுவினி.

வளவன்

**மேஷம்** ஆரோக்கியத்தில் அக்கறைகாட்டும் சூழ்நிலை ஏற்படலாம், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை.

**கடகம்** கல்வி முன்னேற்றம் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**துலாம்** பெரிய மனிதர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், உங்கள் பொறுமைக்கு இன்று பரிசு கிடைக்கும், புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம்.

**மகரம்** பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும்.

**ரிஷபம்** வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நண்பர்களால் வளர்ச்சி கூடும், சுற்றத்தார் வரவால் சுகம் கூடும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**சிம்மம்** பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் கேட்கும் செய்திகளால் உற்சாகமடைவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்க முற்படுவீர்கள்.

**விருச்சிகம்** வீட்டுத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், உறவினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது, பணத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், கற்பனை மிகுதியான நாள்.

**கும்பம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், நீண்ட நாளைய பிரச்சினைகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, செவிகுளிரும் செய்திகள் வந்து சேரலாம்.

**மிதுனம்** ஆரோக்கியத்தில் முன்னேற்ற முண்டு, தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், காரிய அனுகூலமுண்டு.

**கன்னி** எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், சுப முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், நேற்றைய பிரச்சனையொன்று நல்ல முடிவுக்கு வரலாம்.

**தனுசு** திட்டமிட்ட காரியமொன்றில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சுப விரயங்கள் அதிகரிக்கும், ஊர்மாற்றம், இடமாற்றம் என்பன இடம்பெறலாம்.

**மீனம்** உறவினர்களை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், எதிர்ப்புகள் நிறைவேறும் வாய்ப்புண்டு, அன்பால் சாதித்துக் காட்டும் நாள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**உற்சாகம் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரிசனம் 01 ix

## யாழ்.போதனா வைத்தியசாலை

புருசோத்தமன்



(06.03.2026 தொடர்ச்சி)

நோயாளர்களை எங்ஙனம் கௌரவத்துடன் நடத்த வேண்டுமோ அது போல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்தவர்களின் உடல்களை கௌரவமாக உறவினர்களிடம் ஒப்படைப்பது மிகவும் கட்டாயமானதாகும்.

இருந்தும் பல்வேறு சந்தர்ப்பங்களில் மரண விசாரணைகள் இடம்பெறுகின்ற சூழ்நிலைகளில் உயிரிழந்தவரின் உடலை உறவினர்களிடம் ஒப்படைப்பதில் காலதாமதம் ஏற்படுகிறது.

மரணங்களுக்கான காரணங்களைக் கண்டறிவதற்குப் பிரேத பரிசோதனை அவசியம் என்பதை எவரும் நிராகரித்து விட முடியாது.

அதேநேரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் தொடர்ச்சியாகக் கிளினிக் செல்கின்ற - நோய் நிலை சார்ந்த மருத்துவ அறிக்கைகளை வைத்திருக்கக்கூடிய ஒரு நோயாளி, யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சில மணி நேரங்களில் உயிரிழக்கின்ற சந்தர்ப்பங்களில், மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை செய்வதற்கு உத்தரவிடப்படுகிறது.

உண்மையில் குறித்த நோயாளியின் கடந்த கால நோய் நிர்ணய அறிக்கைகள் மற்றும் அவரின் குடும்ப உறவுகளின் வாக்குமூலங்களை அடிப்படையாகக் கொண்டு, மரணத்தில் சந்தேகம் இல்லை எனில் பரிசோதனைகளைத் தவிர்த்து, உறவினர்களிடம் உடலை விரைவாக ஒப்படைப்பது உத்தமமானது.

எனினும் வில்லங்கம் எதற்கு என்பது போல எடுத்ததற்கெல்லாம் பிரேத பரிசோதனைகளை நடத்துவதென்பது காலதாமதத்தை ஏற்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட உறவுகளுக்கும் மிகுந்த மன உளைச்சலையும் ஏற்படுத்தவல்லது.

அது தவிர, உறவினர்கள் பலர் அதற்காக யாழ். போதனா வைத்தியசாலையில் காத்திருக்கின்ற பரிதாபமான நிலைகளும் ஏற்படுகின்றன.

எனவே இதுவிடயத்தில் யாழ்.போதனா வைத்தியசாலை நிர்வாகம் அதீத கவனம் செலுத்த வேண்டும் என்பது நம் தாழ்மையான கோரிக்கை.

ஆம், பொதுவில் முஸ்லிம் இனம் சார்ந்த ஒருவர் யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழக்க நேர்ந்தால், அவரின் ஜனாஸா உடனடியாக அவரின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்படுகின்றது.

24 மணி நேரத்திற்குள் அவரின் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்ற இஸ்லாமிய மார்க்கத்தின் பொருட்டு, உயிரிழந்த இஸ்லாமியரின் உடலை உடனடியாக ஒப்படைக்க முடியுமென்றால், அந்த உரிமை-அந்த விரைவுபடுத்தல் நாம் தமிழர் என்பதால் மறுக்கப்படுகிறதா? என்ற கேள்வி எழவே செய்யும்.

என்ன செய்வது உயிரிழந்த ஓர் இஸ்லாமியரின் உடலை உடனடியாக ஒப்படைக்காமல் பின்னடிக்கப்படுமாயின், அதன் விளைவு பாரதூரமாக இருக்கும் என்பது சம்பந்தப்பட்ட வைத்தியசாலைகளுக்கு நன்கு தெரியும்.

எனவே இஸ்லாமியர்களின் மார்க்கத்துடன் முரண்படாமல், விளக்கம் விசாரணைகள் தவிர்க்கப்பட்டு இஸ்லாமியரின் உடல் கௌரவமாகவும் விரைவாகவும் ஒப்படைக்கப்படுகிறது.

அதேநேரம் ஒரு தமிழர் என்றால், அவரின் உறவுகள் வைத்தியசாலை பிரேத அறைக்கு முன்பாக அழுகண்ணீரோடு காத்திருக்கின்ற பரிதாபம் இனத்தின் பேரால் ஜீரணிக்கப்படுகிறது.

அதிலும் ஒருவர் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்து, அது பற்றி அறியாமல் வைத்தியசாலை வாசலைத் தொட்டு விட்டால் அந்தோ கதிதான்.

சகல சம்பத்துக்களும் நடந்த பின்பே அவரின் உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்படும்.

அவர் மிகக் கடுமையான நோயாளியாக - அந்த நோய் நிலையுடன் அவர் உயிர் வாழக்கூடிய சாத்தியம் மிகமிகக் குறைவு எனத் தெரிந்திருந்தாலும் உயிரற்ற உடலாக வைத்தியசாலையைத் தொட்டு விட்டால், அத்தனை அலுவல்களும் நடந்தாகும்.

இதேவேளை இடைவழியில் உயிரிழந்து விட்டார் என்பதை அறிந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லாமல், வீட்டிற்கு எடுத்துச் சென்றால் அந்தப் புண்ணியவானின் மரணச் சடங்கு எந்த இழுபறியும் இல்லாமல் இனிதே நடந்தேறும்.

### இயற்கையாக மரணித்தும் வெட்டிப் புரைகின்ற...

ஒருவர் இயற்கை மரணமடைந்துள்ளார் என்ற உண்மையை மருத்துவர்கள் தெரிந்திருந்தும் நமக்கேன் வீண் சோலி என்ற நிலைப்பாட்டில் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிடப்படுகின்ற சந்தர்ப்பங்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் நிறையவே நடந்துள்ளது.

எனினும் ஒருவிடயத்தை இங்கு நாம் கூறியாக வேண்டும். அதாவது மரணம் என்பது ஒரு மனிதனின் இறுதி அத்தியாயம்.

அதிலும் தமிழர்களாகிய நாங்கள் மரணம் எவ்வாறாக நடந்தது என்பதை வைத்து அவரின் புண்ணியத்தை எடை போடுகின்ற பண்பாட்டை உடையவர்கள்.

இந் நிலையில், இயற்கையான மரணத்தைத் தழுவிய போதிலும் காலப்பிழை போல உடலை வெட்டிப் புரைந்து அவரின் கோலத்தை மாற்றுகின்ற சம்பவங்கள் மனித வாழ்வின் நிறைவைக் கூட பழுதாக்கி விடுகிறது.

எனவே முடிந்தளவில் மருத்துவ ரீதியான முடிவுகளோடு, உயிரிழந்தவர்களின் உடல்களை உறவினர்களிடம் விரைவாக ஒப்படைக்க யாழ்.போதனா வைத்தியசாலைச் சமூகம் முன்வர வேண்டும்.

நாளை தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 5

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 994





தமிழ் மொழியின் தந்தையாகிய அகஸ்திய முனிவருக்கு அந்த நாடுகளில் விசேஷ மரியாதை உண்டு என்பதையும் அம்முனிவருக்குப் பல கோயில்கள் கட்டியிருப்பதையும் கூறினார்.

இதையெல்லாம் திரும்பத் திரும்ப அருள்மொழி வர்மர் கேட்டுத் தெரிந்து, மனதிலும் பதிய வைத்துக் கொண்டார். அந்தந்த தேசங்களுக்குத் தரை வழியான மார்க்கங்களையும், கடல் வழியான மார்க்கங்களையும் இளவரசர் நன்கு விசாரித்து அறிந்தார். வழியில் உள்ள அபாயங்கள் என்ன, வசதிகள் என்ன என்பதையும் கேட்டு அறிந்தார்.

“சுவாமி! அந்த நாடுகளில் மறுபடியும் தாங்கள் யாத்திரை செய்யும்படியாக நேரிடுமோ?” என்று வினவினார்.

“புத்த பகவானுடைய சித்தம்போல் நடக்கும், இளவரசே! எதற்காகக் கேட்கிறீர்கள்?” என்றார் பிக்கு.

“நானும் தங்களுடன் வரலாம் என்ற ஆசையினால் தான்.”

“நான் உலகத்தைத் துறந்த சந்நியாசி. தாங்கள் புவி ஆளும் சக்கரவர்த்தியின் திருக்குமாரர். தாங்களும், நானும் சேர்ந்து யாத்திரை செய்வது எப்படி? தங்களைச் சில நாள் இந்த விஹாரத்தில் வைத்துக் காப்பாற்றும் பொறுப்பே எனக்குப் பெரும் பாரமாயிருக்கிறது. எப்போது, என்ன நேருமோ என்று நெஞ்சு ‘திக், திக்’ என்று அடித்துக் கொள்கிறது”

“சுவாமி! அந்தப் பாரத்தை உடனே நிவர்த்தி செய்ய விரும்புகிறேன். இந்தக் கணமே இங்கிருந்து...”

“இளவரசே! ஒன்று நினைத்து ஒன்றைச் சொல்லிவிட்டேன். தங்களை இங்கு வைத்துக் கொண்டிருப்பது பாரமாயிருந்தாலும், அதை ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன்.

தங்கள் தந்தையாகிய சக்கரவர்த்தியும், தமக்கையார் இளைய பிராட்டியும் புத்த தர்மத்துக்கு எவ்வளவோ உதவி செய்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் பட்டிருக்கும் நன்றிக் கடனில் ஆயிரத்தில் ஒரு பங்குக்குக் கூட இப்போது நாங்கள் செய்வது ஈடாகாது.

தாங்கள் புத்த தர்மத்துக்குச் செய்திருக்கும் உதவி தான் அற்ப சொற்பமானதா? அநுராதபுரத்தின் சிதிலமான ஸ்தூபங்களையும், விஹாரங்களையும் செப்பனிடச் செய்த கைங்கரியத்தை நாங்கள் மறக்க முடியுமா? அதற்கெல்லாம் இணையான பிரதி உபகாரமாக ஈழ நாட்டின் மணி மகுடத்தையே தங்களுக்கு அளிக்கப் பிக்குகள் முன் வந்தார்கள்.

இளவரசே! அதை ஏன் மறுத்தீர்கள்? இலங்கையின் சுதந்திரச் சிங்காதனத்தில் தாங்கள் ஏறியிருந்தால், நூறு நூறு கப்பல்களில் ஏராளமான பரிவாரங்களுடனே, கீழ்த்திசை நாடுகளுக்குத் தாங்கள் போய் வரலாமே? இந்தப் பிக்குவைப் பின் தொடர்ந்து யாத்திரை செய்ய வேண்டுமென்ற விருப்பமே தங்கள் மனதில் தோன்றியிராதே?” என்றார் ஆச்சாரிய பிக்கு.

“குருதேவரே! இலங்கை இராஜகுலத்தின் சரித்திரத்தைக் கூறும் ‘மகாவம்சம்’ என்னும் கிரந்தத்தைத் தாங்கள் படித்ததுண்டா?” என்று இளவரசர் கேட்டார்.

“ஐயா! இது என்ன கேள்வி? ‘மகாவம்சம்’ படிக்காமல் நான் இந்தச் சூடாமணி விஹாரத்தின் தலைவனாக ஆகியிருக்க முடியுமா?”

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## இரண்டும் உண்மை!



நபிகள் நாயகத்தின் சீடர்கள் இருவர் இஸ்லாம் சமயத்தைப் பரப்புவதற்காக ஒரே நகரத்திற்குச் சென்றார்கள்.

சில மாதங்களுக்குப் பிறகு முதல் சீடன் நபிகளிடம் திரும்பி வந்தான். “அந்த நகரத்தில் உள்ள மக்கள் எல்லோரும் முட்டாள்களாக உள்ளனர். எதைப் பற்றியும் தெரிந்து கொள்ள அவர்களுக்கு விருப்பம் இல்லை. தங்கள் கொள்கையில் பிடிவாதமாக உள்ளனர். அக்கொடியவர்களில் ஒருவனைக்கூட நம் சமயத்திற்குத் திருப்ப முடியாது. அதனால் நீங்கள் அங்கு சென்றால் எந்த பயனும் இராது” என்று சொன்னான்.

இதைக் கேட்ட நபிகள், “நீ சொல்வது உண்மைதான்” என்றார்.

சில நாட்களுக்கு பின் இன்னொரு சீடன் திரும்பி வந்தான், மகிழ்ச்சிப் பெருக்குடன் நபிகளைப் பார்த்து,

“நாயகமே! நீங்கள் தவறாமல் அந்த நகரத்திற்கு வர வேண்டும். உண்மையான உங்கள் அறிவுரையைக் கேட்டு நம் சமயத்தில் சேர்வதற்காக அவர்கள் காத்திருக்கிறார்கள்” என்று சொன்னான்.

நபிகள் நாயகம் இப்பொழுதும், “நீ சொல்வது உண்மைதான்” என்றார்.

நபிகள் உடன் இருந்த சீடர்கள், “ஐயா! முதல் சீடன் வந்த பொழுதும் அவன் சொன்னது உண்மை என்று சொன்னீர்கள். இப்பொழுது இரண்டாம் சீடன் அவனுக்கு நேர் எதிராகச் சொன்ன போதும் நீங்கள் அதுவும் உண்மை என்றீர்கள்.

எங்களுக்கு ஒரே குழப்பமாக உள்ளது. ஏனென்றால் இருவர் சொன்னதும் ஒரே சமயத்தில் உண்மையாக இருக்க முடியாது” என்றார்கள்.

நபிகள் சிரித்துக் கொண்டே “ஒவ்வொருவரும் தாங்கள் எதிர்பார்ப்பதைப் போலத்தான் இந்த உலகத்தைப் பார்க்கின்றார்கள்.

நான் எதற்காக அந்த இரண்டு சீடர்களுடனும் முரண்படவேண்டும். ஒருவன் கெட்டதைப் பார்க்கிறான்.

இன்னொருவன் நல்லதைப் பார்க்கிறான். அவர்களைப் பொறுத்தவரையில் இருவர் பார்த்ததும் உண்மைதான். இந்த உலகம் நல்லதும் கெட்டதும் கலந்தது. இருவருமே முழு உண்மையைப் பார்க்கவில்லை. ஆகவே இருவர் சொன்னதும் உண்மை என்று சொன்னேன்” என விளக்கம் தந்தார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இனத்தாற்றி எண்ணாத வேந்தன் சினத்தாற்றிச்
சீறின் சிறுகும் திரு.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அரசின் மனிதாபிமானம் தமிழ் மக்கள் மீதும் இருக்கட்டும்

எய்தவன் இருக்க அம்பை நோவது ஏற்புடையதன்று. ஆம், 2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் நடந்த தமிழின அழிப்புக்கும் இன்றைய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் தொடர்பில்லை என்பது தெரிந்த விடயம்.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தை மகிந்த ராஜபக்ஷ தரப்பு நடத்திய போது – வன்னிப் பெரு நிலப்பரப்பில் வைத்து ஈவிரக்கமின்றித் தமிழ் மக்களை ராஜபக்ஷ அரசு கொன்று குவித்தபோது இலங்கைப் பாராளுமன்றத்தின் உறுப்பினராக அநுர குமார திஸாநாயக்க இருந்தார். தவிர, தற்போது அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாகவும் உள்ளார்.

இங்குதான் பேரினவாத ஆட்சியாளர்களால் வதைக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுக்கின்ற தார்மீகக் கடமை ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு உண்டு.

ஆம், ஈரானியக் கப்பலில் இருந்தவர்கள் தங்களைக் காப்பாற்றுமாறு இலங்கை அரசிடம் விடுத்த கோரிக்கையை மனிதநேயத்துடன் நோக்கிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க; எதிரில் அமெரிக்கா எனக் கிஞ்சித்தும் நினைக்காமல், மனிதநேயத்துக்கு மட்டுமே முதலிடம் கொடுத்து கப்பலில் இருந்த ஈரானியர்களைக் காப்பாற்றினார்.

இதனால் ஜனாதிபதி அநுரவின் தற்துணிவான முடிவை ஐக்கிய நாடுகள் சபை வரவேற்றுப் பாராட்டியுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கையில், சொந்த மண்ணில் தமிழர் என்ற ஒரே காரணத்தால் பேரினவாத ஆட்சியாளர்களால் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் இன்னமும் கண்ணீரும் கம்பலையுமாக அலைகின்றனர்.

இவர்களுக்கு நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அதீத முனைப்புக் காட்ட வேண்டும் என்பதைத்தான் நாம் இங்கு வலியுறுத்துகின்றோம்.

அதாவது ஈரானியக் கப்பலில் இருந்தவர்கள் அடைக்கலம் கோரியபோது, அதனை மனிதநேயத்துடன் சீர்தூக்கி ஆராய்ந்த நீங்கள் – அது விடயத்தில் ஐ.நா சபையின் ஆலோசனையைப் பெற்ற நீங்கள்; காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் விடயத்தில் மட்டும் மனிதநேயத்தை – ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் நிபந்தனைகளை நிறைவேற்றுவதில் காலம் தாழ்த்துவது ஏன்? என்பதுதான் புரியவில்லை.

ஈரானியர்களைக் காப்பாற்றிய ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் மனிதநேயத்தால், இலங்கைத் தமிழர்களாகிய நாமும் மகிழ்வடைகின்றோம்.

அதேநேரம் மனிதநேயத்தில் இனம், மொழி, பெரும்பான்மை, சிறுபான்மை என்ற ஏற்ற இறக்கங்களுக்கு இம்மியும் இடமிருக்கலாகாது.

ஆக, வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கு இடம்கொடுத்து பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு நீதியையும் மனிதவதை செய்தவர்களுக்கு – அதற்கு உத்தரவிட்டவர்களுக்கு கடூழியத் தண்டனையையும் பெற்றுக் கொடுக்க ஜனாதிபதி அநுர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதைச் செய்யும் போதுதான் இலங்கையின் மனிதநேயம் அங்கீகரிக்கப்படும்.

# வலுசக்தி அமைச்சர் ஜெயக்கொடிக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

## ஐ.ம.சக்தி அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

வலுசக்தி அமைச்சர் குமார ஜெயக்கொடிக்கு எதிராக பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாப் பிரேரணை ஒன்றைக் கொண்டு வரவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

தமது கட்சி ஏகமனதாக எடுத்த தீர்மானத்திற்கு அமைய இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வரப்படவுள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

ஊழல் எதிர்ப்பு ஆணைக்குழுவினால் அமைச்சருக்கு எதிராக ஏற்கெனவே கொழும்பு மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளமை மற்றும் நிலக்கரி கொள்வனவு செயல்முறையை சரியாக நிர்வகிக்கத் தவறியமை ஆகிய இரண்டு காரணங்களின் அடிப்படையில் அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

ஐக்கிய மக்கள் சக்தியுடன் எதிர்க்கட்சியில் செயற்படும் ஏனைய குழுக்களுடனும் கலந்துரையாடி, பரந்தளவிலான ஆதரவைப் பெற்றுக்கொள்ள நாங்கள் நடவடிக்கை எடுப்போம்.

அதேபோல், அரசாங்கத்திற்குள் இருந்து கொண்டு தமது தனிப்பட்ட விருப்பத்தின் பேரில் சுதந்திரமாக வாக்களிக்கக்கூடிய பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் எமக்கு ஆதரவு வழங்குமாறும் கோரியுள்ளோம் என்றார். (ந-7)

# பிரிட்டனுக்கு ஆதரவாக களமிறங்கும் ஜேர்மனி

## அதிகரிக்கும் பரபரப்பு

பிரித்தானியாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் ஜேர்மனியப் போர்க்கப்பலான FG நோர்த்ரைன்-வெஸ்ட்பாலன் வில்ஹெல்ம்ஷாவன் துறைமுகத்தைச் சென்றடைந்துள்ளது.

கடந்த வாரம் அக்ரோதிரியில் உள்ள பிரித்தானிய இராணுவத் தளத்திற்கு அருகே நடத்தப்பட்ட ட்ரோன் தாக்குதலைத் தொடர்ந்து, சைப்ரஸில் நிலைநிறுத்தப்பட்டு வரும் சர்வதேச இராணுவப் படைகளுடன் இதுவும் இணைந்துகொள்கிறது.

ஏற்கெனவே பிரான்ஸ், இத்தாலி மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளும் போர்க்கப்பல்களை அனுப்பவுள்ளதாக அறிவித்துள்ளன.

இதேவேளை பிரித்தானியா எஃப்-16 போர் விமானங்கள் மற்றும் இரண்டு போர்க்கப்பல்களை அந்தத் தீவுக்கு அனுப்பியுள்ளதுடன், HMS டிராகன் எனும் அதிநவீன போர்க் கப்பலையும் இப்பகுதிக்கு அனுப்பத் தயாராகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# புளியங்குளத்தில் விபத்து குருநாகல் வாசி பலி

வவுனியா புளியங்குளத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளதாக புளியங்குளம் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த சம்பவமானது நேற்று முன்தினம் இடம்பெற்றிருந்தது.

முல்லைத்தீவில் இருந்து குருநாகல் நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள் முன்னே சென்ற துவிச்சக்கர வண்டியுடன் மோதியதில் விபத்து சம்பவித்துள்ளது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளின் பின்னே இருந்து பயணித்தவர் உயிரிழந்துள்ளதுடன் மோட்டார் சைக்கிளில் சென்றவர் மற்றும் துவிச்சக்கர வண்டி சாரதி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்தில் குருநாகல் பகுதியைச் சேர்ந்த 59 வயதுடைய உமர் லெப்பை அப்துல் ரவூப் என்பவரே உயிரிழந்துள்ளார். மேலதிக விசாரணையினை புளியங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ந-7)

# கமக்கார அமைப்பின் பொதுக்கூட்டம்

(கரம்பகம்)

கரம்பகம் கமக்கார அமைப்பின் பொதுக் கூட்டமானது நாளை 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் கரம்பகம் ஒட்டுவெளி பொது நோக்கு மண்டபத்தில் கரம்பகம் கமக்கார அமைப்பின் தலைவர் அ.அகிலதாஸ் தலைமையில் இடம்பெறவுள்ளது. (ந-7)

# பெற்றோலைப் பதுக்கிய பெண்ணொருவர் கைது

(கல்முனை)

வீடொன்றில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த ஒரு தொகுதி பெற்றோலை கல்முனை தலைமையக பொலிஸார் மீட்டுள்ளதுடன் பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

வீடொன்றில் பெற்றோல் பதுக்கி வைக்கப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருவதாக கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நேற்றுக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன் போது குறித்த வீட்டின் கட்டிலின் கீழ் போத்தல் மற்றும் கலன்களில் மறைத்து வைக்கப்பட்ட நிலையில் சுமார் 32 லீற்றர் பெற்றோல் மீட்கப்பட்டுள்ளது.

அத்துடன் 39 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவர் கைதான நிலையில் பொலிஸ் பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

குறித்த வழக்கு இன்று திங்கட்கிழமை(9) கல்முனை நீதிவான் நீதிமன்றத்தில் சட்ட நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# மீன் என்ற போர்வையில் ஹெரோயின் விற்பனை

## இருவர் கைது

(கல்முனை)

மீன் விற்பனை செய்வது போல பாசாங்கு செய்து ஹெரோயின் போதைப்பொருளை விற்பனை செய்த இரு சந்தேக நபர்களை கல்முனை தலைமையகப் பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்குக் கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய ஊழல் ஒழிப்புப் பிரிவு உப பொலிஸ் பரிசோதகர்கள் தலைமையில் இக்கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது 23, 49 வயதுடைய இரு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் சந்தேக நபர்கள் வசமிருந்து 40 மற்றும் 50 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருட்களும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலைக் கைது செய்யச் சதி செய்தவர் அநுரவையும் கைது செய்யச் சதி செய்வார்

## உதய கம்மன்பில சுட்டிக்காட்டு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதில் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்ட நபர் எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவையும் கைது செய்வதற்கும் சதி செய்வார். ஆகவே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க அவதானத்துடன் செயற்பட வேண்டும் என பிவிதுறு ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க லண்டன் பல்கலைக்கழகத்துக்கு பட்டமளிப்பு நிகழ்வுக்கு சென்றமை தொடர்பில் சமூக செயற்பாட்டாளரான ஓசல ஹேரத், தகவலறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக லண்டன் பல்கலைக்கழகத்திடமிருந்து பெற்றுக் கொண்ட விடயங்களை மேற்கோள்காட்டி தனது உத்தியோகபூர்வ எக்ஸ் வலைத்தளத்தில் மேற்கண்டவாறு பதிவேற்றம் செய்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க அவதானத்துடன் செயற்பட வேண்டும்.

ஜனாதிபதி ஒருவருக்கு ஏதேனும் நிகழ்வுகளுக்கு உத்தியோகபூர்வ அழைப்பு விடுக்கப்படும் போது அவருக்கான பாதுகாப்பு மற்றும் ஏனைய வசதிகளை இலங்கை அரசாங்கமே வழங்க வேண்டும். ரணில் விக்கிரமசிங்கவை கைது செய்வதில் பிரதான சூத்திரதாரியாக செயற்பட்ட நபர் எதிர்காலத்தில் ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்கவையும் கைது செய்வதற்கு சதி செய்வார் என அவர் பதிவேற்றம் செய்துள்ளார். (க-8)

# போதுமான அளவு எரிபொருள் கையிருப்பில் உள்ளது

## இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

**(கொழும்பு) ........................ உலக சந்தையில் எரிபொருள் விலை அதிகரித்து வரும் நிலையில், இலங்கையின் எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அவசரகால திட்டங்களை இலங்கை கனிம எண்ணெய் கூட்டுத்தாபனம் தயாரித்துள்ளது.**

தற்போது ஓகஸ்ட் மாதம் வரை போதுமான அளவு மசகு எண்ணெய் உள்ளிட்ட எரிபொருள் கையிருப்பு உள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் மாதத்திற்குப் பின்னர் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி செய்ய இந்தியாவிடம் இருந்து அதிகப்படியான எரிபொருளைக் கொள்வனவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கான பேச்சுவார்த்தைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. போக்குவரத்துச் செலவு குறைவு என்பதால் இந்திய நிறுவனங்களுக்கே முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

சிங்கப்பூர் ஊடாகப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்பும் திறந்தே உள்ளது. இதேவேளை, வளைகுடா பிராந்தியத்தில் போர் நீடித்தால், இலங்கையில் எரிபொருள் விலை அதிகரிக்க வாய்ப்புள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (8)


# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கஸ்தூரி வெண்டி



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

Botanical Name-
Abelmaschus esculentus
family-Malvaceae
Eng.name-Musk mallow



கஸ்தூரிவெண்டி மிகவும் அரிதான, மருத்துவக் குணங்கள் நிறைந்த காய்கறியாகும். இது வெண்டை ரகங்களில் முக்கியமான ஒன்று.

கஸ்தூரி வெண்டையின் காய், பூ, தளிரை சமையலுக்கு பயன்படுத்தலாம். இதன் விதைகள் தக்கோலம் என அழைக்கப்படுகிறது. இது சித்த மருத்துவத்தில் நிறைய பயன்படுத்தப்படுகிறது.

இதனுடைய விதைகளை அரைத்து அதிலிருந்து வாசனை திரவியம் செய்ய பயன்படுத்துகிறார்கள்.

கஸ்தூரி வெண்டிகளைச் செடி போலவே வேகமாக வளரக்கூடியதாகும்.

இரண்டே மாதத்தில் காய்கள் கொத்துக் கொத்தாக காய்க்க ஆரம்பித்துவிடும்.

இந்த கஸ்தூரி வெண்டையை காயாக இருக்கும் போது சமையலுக்கு பயன்படுத்தலாம்.

அதுவே காய்ந்து போய்விட்டால், அதன் விதைகளை காயவைத்து உலர்த்தி கோப்பிப் பொடியாக பயன்படுத்தலாம்.இது பச்சையாக கடிக்கக்கூடியது சதைப்பற்று குறைவாகவும், விதைகள் அதிகமாகவும் நறுமணத்துடனும் இருக்கும். இந்த அரியவகை கஸ்தூரி வெண்டைக்காய்களை உணவில் சேர்ப்பதன் மூலம் சுறுசுறுப்பு, நரம்புத் தளர்ச்சி நீக்கம் மற்றும் சிறந்த செரிமானத்திற்கு உதவுகிறது.

கண்பார்வை கோளாறுகளை நீக்கி, மலச்சிக்கல் பிரச்சினையை தீர்க்க வல்லது.

குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை உணவில் குறிப்பாக பொரியல், குழம்பு அல்லது பச்சையாகக் கூட பயன்படுத்தலாம்.

கஸ்தூரி வெண்டை உயிர்ச்சத்து A, C,K பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த ஒரு சத்தான இனமாகும்.

நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது. இரத்தத்தின் சீனியின் அளவை ஒழுங்குபடுத்துகிறது மற்றும் இரத்த அழுத்தத்தை சீராக பேணி இருதய ஆரோக்கியத்திற்கு உதவுகிறது.

இதில் இருக்கும் உயிர்ச்சத்து A (கண் பார்வை) உயிர்ச்சத்து C (நோய் எதிர்ப்பு சக்தி) உயிர்ச்சத்து K (இரத்தம் உறைதல்) மற்றும் நார்ச்சத்து (செரிமானம்) நிறைந்துள்ளது.

ஆக்ஸிஜனேற்றிகள் (Antioxidants) கலங்கள் சேதமடைவதைத் தடுக்கின்றது மற்றும் வீக்கத்தை (Inflammation) குறைக்கிறது.

இதில் உள்ள நார்ச்சத்து மற்றும் ஆன்டிஆக்ஸிடன்கள் கொலஸ்ரோலை குறைத்து, இரத்த ஓட்டத்தை மேம்படுத்தி இதயத்தை பாதுகாக்கிறது.

பச்சையாக கஸ்தூரிவெண்டைக் காயை சா[illegible] பிரச்சினை நீங்கி வயிற்று புண்ணை ஆற்றும் ஆற்றல் உண்டு. அதிக நீரேற்றம் கொண்ட காயாகவும் திகழும். ஈரலுக்கு சிறந்த காயாகும் மற்றும் பச்சையாக கஸ்தூரிவெண்டைக்காயை சாப்பிடும் போது நார்ச்சத்து அதிகமாகக் காணப்படும். இதனால் செரிமானம் சீராகி மலச்சிக்கல் பிரச்சினையும் தீரும்.

வெண்டைக்காயில் இருக்கும் தாதுச் சத்துக்கள் என்புகளை பலப்படுத்தக் கூடியது. புற்றுநோயை கட்டுப்படுத்தும் ஆற்றலும் இவ் கஸ்தூரிவெண்டைக் காயிற்கும் உண்டு.

அத்துடன் கஸ்தூரிவெண்டக்காயில் அடங்கியுள்ள நீர்ச்சத்து, திரவ இழப்பை தடுத்து உடலை குளிர்ச்சியாக வைத்திருக்க உதவும்.

கர்ப்பகாலத்தில் பெண்கள் இக் காய்களை உண்ணும் போது இதிலுள்ள ஃபோலேட் சத்து கருவில் உள்ள சிசுவின் மூளை வளர்ச்சியை அதிகரிப்பதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

நீரிழிவு நோயாளிகள் இவ் கஸ்தூரி வெண்டைக்காய்களை வெட்டி நீரில் ஊற வைத்து பருகி வருவதன் மூலம் இரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்தலாம்.

இவ் வெண்டைக்காயை பச்சையாக மென்று சாப்பிட்டு வந்தால் பற்கள் தூய்மை பெறுவதுடன் ஈறுகளில் இரத்த ஓட்டம் தூண்டப்படும். ஈறு தொடர்பான நோய்களும் சரியாகும்.

இத்துடன் உயிர்ச்சத்து $B_6$ உம் காணப்படும்.

வெண்டைக்காயை சாப்பிடும் போது இரத்தத்தில் கொலஸ்ரோலின் அளவு கட்டுப்படும். இதனை நவீன ஆய்வுகள் கூட உறுதிப்படுத்தி உள்ளது. வெண்டைக்காயை வெட்டும் போது வழுவழுப்பான Mucilage காணப்படும்.

இது நாம் உண்ணும் உணவு குடலில் செல்லும் போது உணவிலுள்ள கொலஸ்ரோலுடன் ஒட்டிக் கொண்டு அவ் கொலஸ்ரோல் ஆனது இரத்தத்தில் கலப்பதை தடுக்கின்றது. இந்தச் செய்கை கஸ்தூரி வெண்டைக்காய்களுக்கு சிறப்பாக உண்டு.

எனவே கொலஸ்ரோல் மலத்துடன் வெளியே வந்துவிடும். இந்த மியூசிலேங் என்பது ஒருவகையான நார்ச்சத்து. இது பச்சையாக கஸ்தூரி வெண்டைக்காய்களை சாப்பிடும் போது கூடுதலாக கிடைக்கும். வெண்டைக்காயை நீரிழிவு நோயாளிகள் சாப்பிடும் போது இன்சுலின் எதிர்ப்பு தன்மை கட்டுப்பாடாக இருக்கும். இதனால் சர்க்கரை அளவு கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

கஸ் தூரிவெண்டைக்காயில் இருக்கும் Prebiotic பதார்த்தங்கள் குடலில் நல்ல பக்ரீரியாக்களின் உற்பத்தியை தூண்டி குடல் ஆரோக்கியத்திற்கு உதவுகிறது.

சாப்பாட்டின் முன்பு ஒரு கப் வெண்டைக்காய்களை பொரியலையோ அல்லது பச்சையாகவோ சாப்பிடும் போது ghrelin ஹோமோனின் செயற்பாட்டை (பசித்தீயை தூண்டக்கூடிய ) சீராக்கி மேலதிகமாக சோறு சாப்பிடுவதையும் தடுக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எந்தவொரு...

நடைபெற்ற சர்வதேச மகளிர் தின நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த ஜனாதிபதி அநுர,

உலகில் ஏற்படும் எந்தவொரு யுத்தத்தின்போதும் மனிதநேயத்தின் கொடியை முன்னெடுத்துச் செல்லும் தேசம் இலங்கை என்ற செய்தியை உலகிற்கு பறை சாற்றுகின்றோம்.

உலகில் எவ்வளவு வளர்ந்த நாடுகள் இருந்தாலும், இலங்கை எத்தகைய பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்தாலும், மனித நேயம் நிறைந்த மக்கள் வாழும் ஒரே நாடு இலங்கை என்ற நாமத்தை உலகிற்கு எடுத்துரைப்போம்.

அனைத்து மக்களையும் பேதமின்றி, பரிவுணர்வுடன் நடத்தும் ஒரு அரசாக மாற்றுவதில் இந்நாட்டு சிறுவர்களும் பெண்களும் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது தொடர்பில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன் என்றார். (ந-7)

## ரூ.2.8 பில்லியன்...

தெற்குக் கடற்பரப்பில், நேற்றைய தினம் கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பலநாள் மீன்பிடிப் படகில் இருந்த போதைப்பொருட்களின் பெறுமதி சுமார் 2.8 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் அருண ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்து வெளியிட்ட அவர்,

குறித்த படகு மற்றும் போதைப் பொருள் என்பன திக்கோவிட்ட துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்ட பின்னர் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது, 103 கிலோகிராம் ஹெரோயின், சுமார் 01 கிலோகிராம் கொக்கைன் என்பன அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதன் மதிப்பு 2.8 பில்லியன் ரூபாய் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல் சம்பவம் தொடர்பில் குறித்த படகில் இருந்த 6 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

தற்போது பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பணியகம் இந்தப் போதைப்பொருட்களை உறுதிப்படுத்தியுள்ளதுடன், இது பாரிய அளவிலான கடத்தல் நடவடிக்கையாகும் என அமைச்சர் தெரிவித்தார். (ந-7)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## உறவுகளுக்கு...

இராணுவத்திடம் கையளித்த தமது உறவுகள் எங்கே? இவர்களுக்கு என்ன நடந்தது. இந்த விவகாரத்துக்கு சர்வதேச நீதி விசாரணையே வேண்டும் எனக் கோரி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகளின் சங்கத்தினரால் இறுதி யுத்தத்தின் சாட்சியாகக் காணப்படும் வட்டுவாகல் பாலத்தில் நேற்று (8) மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது .

முல்லைத்தீவு மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டமானது இன்று (நேற்று) ஒன்பது ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில், சர்வதேச மகளிர் மகளிர் தினம் எமக்கு துக்க தினம் எனத் தெரிவித்து தமக்கு சர்வதேச விசாரணையே தீர்வு எனக் குறிப்பிட்டனர்

இராணுவத்திடம் ஒப்படைத்த தமது உறவுகளுக்கு என்ன நடந்தது என இதுவரை இலங்கை அரசாங்கத்தால் எந்தத் தகவலும் வெளியிடவில்லை எனவும் இனப் படுகொலையாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் பாரப்படுத்து, இராணுவத்தினரிடம் ஒப்படைத்த எமது பிள்ளைகள் எங்கே, வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின்படி சுயநிர்ணயம் எங்கள் உரிமை, சர்வதேசமே பதில் சொல் எனப் பல்வேறு கோசங்களை தாங்கிய பதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எங்கே எங்கே உறவுகள் எங்கே, பழைய சட்டமும் வேண்டாம் புதிய சட்டமும் வேண்டாம், அழிக்காதே அழிக்காதே தமிழரின் இன அழிப்பின் அடையாளமான வட்டுவாகல் பாலத்தை அழிக்காதே, வேண்டும் வேண்டும் சர்வதேச விசாரணை வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோசங்களுடன் வட்டுவாகல் பாலத்தடியில் ஆரம்பித்த கவனயீர்ப்புப் போராட்டம் செல்வபுரத்தில் இராணுவத்திடம் உறவுகளை கையளித்த இடம் வரை சென்று நிறைவடைந்தது.

குறித்த போராட்டத்தில் முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த காணாமலாக்கப்பட்டவர்களின் உறவுகள், பாராளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன், முன்னாள் யாழ்.மாநகர மேயர் மணிவண்ணன் பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

போராட்டத்தின் இறுதியில் கோரிக்கைகள் உள்ளடங்கிய மகஜர் வாசிக்கப்பட்டதுடன்அதனை ஐக்கிய நாடுகள் சபையின் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ந-7,316)

## ஈரா...

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர்,

சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் கடல்சார் சட்ட விதிகளைப் பின்பற்றி, அணிசேரா கொள்கையின் அடிப்படையில் ஈரான் மாலுமிகள் தொடர்பான இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தீர்மானங்கள் மூலம் எந்தவொரு தரப்புக்கும் ஆதரவளிப்பதோ அல்லது எவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதோ அரசாங்கத்தின் நோக்கமல்ல.

உலகளாவிய ரீதியில் போர்ச்சூழல்கள் நிலவினாலும், அதன் மறைமுகத் தாக்கங்களுக்கு மத்தியில் தேசிய பாதுகாப்பிற்கே அரசாங்கம் முதலிடம் வழங்கும்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் நாட்டின் பாதுகாப்பு மற்றும் மக்களின் பாதுகாப்புக் குறித்து மிகுந்த அவதானத்துடன் செயற்படும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை என்றார். (ந-7)

## ஊழல் வழக்கு...

கடந்த 2014ஆம் ஆண்டு லங்கா உர நிறுவனத்தின் கொள்முதல் மேலாளராகப் பணியாற்றியபோது, ஹுனுப்பிட்டியவில் உள்ள நிறுவன வளாகத்தில் "இன்டர்லோக்கிங்" கற்கள் பதிக்கும் பணியில் தனியார் நிறுவனம் ஒன்றிற்கு முறைகேடாக இலாபம் ஈட்டிக் கொடுத்ததாக அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இதன்மூலம் அரசுக்கு 8.8 மில்லியன் ரூபாய்க்கும் அதிக நஷ்டத்தை அவர் ஏற்படுத்தியதாகக் கூறி, கையூட்டல் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வாரத் தொடக்கத்தில் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராகக் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்துள்ளது. (ந-7)


மஹஜன சம்பத
திகதி 2026.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 6127
Q 6 8 0 4 1 9
அத சம்பத
Q 0 4 1 9
சீட்டிழுப்பு இலக்கம் 0702
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2026.03.08
0243
சிங்கம் 10 48 57
5834

தன நிதானய
திகதி - 2026.03.08
சீட்டிழுப்பு இலக்கம் - 2157
O 08 17 33 45 O
3372

மெகா பவர்
திகதி 08/03/2026
சீட்டிழுப்பு இலக்கம் 2475
H 06 03 30 56 70

ஜய
திகதி 2026.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 395
L 7 4 8 3
1411

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4369
சீட்டிழுப்பு திகதி 08.03.2026
Z 06 39 48 68
தேசிய லொத்தர் சபை

ஹந்தஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2026.03.08
சீட்டிழுப்பு இலக்கம் 1436
கடகம் 21 22 24 26 கடகம்

உத்தியோகபூர்வ முடிவுகள்
08.03.2026 வெற்றி வாரம் 0835
J 4 0 3 3 2 4
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.23,183,276.80
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 3101
சீட்டிழுப்பு திகதி 2026.03.08
தினம் ஞாயிற்றுக்கிழமை
30 46 59 64 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 105,190,256.80

சனிதா
திகதி 08.03.2026 வெற்றி வாரம் 5262
17 33 49 65 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 55,333,268.80

சசிரி
வெற்றி வாரம் 931
சீட்டிழுப்பு திகதி 08.03.2026
08 32 38
ஞாயிற்றுக்கிழமை
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.3,263,920.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4813
சீட்டிழுப்பு திகதி 08.03.2026
தினம் ஞாயிற்றுக்கிழமை
10 23 41 53 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,019,768.80

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
P 18 20 43 67 74
2277
08.03.2026
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.180,464,664.00

அட கோடீபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2927
சீட்டிழுப்பு திகதி: 2026.03.08
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.98,415,030.40
09 28 34 72 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம்
22 - 02 - 1955



மறைவு
07 - 03 - 2026

## தர்மகுலசிங்கம் கணேஸ்வரி
## (ஞானேஸ்)

சிவன்கோவிலடி, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தர்மகுலசிங்கம் கணேஸ்வரி (ஞானேஸ்) அவர்கள் கடந்த (07.03.2026) சனிக்கிழமை அன்று இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மார்க்கண்டுபிள்ளை - இராஜேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் தளையசிங்கம் - சரஸ்வதிஅம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் தளையசிங்கம் தர்மகுலசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும் சிவதாரணி, சிவகரன், சிவஜெகநாத் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சிவன்கோவிலடி, வட்டு வடக்கு, வட்டுக்கோட்டையில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (09.03.2026) திங்கட்கிழமை முற்பகல் 09.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாறு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவன் கோவிலடி,
வட்டு வடக்கு, வட்டுக்கோட்டை.

தகவல்:
குடும்பத்தினர்

(7005)


SLIIT | NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL

ADMISSIONS, OPEN NOW

CERTIFICATE IN ROBOTICS AND ARTIFICIAL INTELLIGENCE

CREATE A PATH TO DIPLOMA

75 Hours - 3 Credits
Weekend/ Weekdays

INVESTMENT
LKR 25,000

(C-5156)

SLIIT NORTHERN UNI,
239 Arasadi Road,
Kantharmadam Junction, Jaffna

077 147 1471
021 7534 807
northernuni.lk | admissions@northernuni.com


## காணி விற்பனைக்கு

### யாழ்ப்பாணம் மானிப்பாய் நகரத்தில் 12 நிலப்பரப்புக் காணி விற்பனைக்கு

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன்
- மானிப்பாய் நகரம் சோதி வேம்படி வித்தியாலயம் அருகு வழி வேம்படி வீதியில்
- யாழ்ப்பாணம் காரைநகர் பிரதான வீதியில் இருந்து 300m தூரத்தில்
- வங்கிகள், பாடசாலைகள், பிரதான வர்த்தக நிலையங்கள் 400m தூரத்துக்குள்
- நல்ல சூழல், நன்னீர் ஊற்று நிலம்
- ஒரு பரப்பின் விலை முன் காணித் துண்டு - 3200000/= (முப்பத்திரண்டு இலட்சம்)
- நடுக் காணித் துண்டு - 2800000/= (இருபத்தி எட்டு இலட்சம்)
- பின் காணித் துண்டு 2600000/= (இருத்தி ஆறு இலட்சம்)
- பார்வையிடும் நேரம் - காலை 8 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(2127)

**074 029 2338, 076 990 3039, 077 288 0152**

## வேலைவாய்ப்பு

அகரவ் பப்ளீசிங் மீடியா நிறுவனத்தின் மார்கெட்டிங் பகுதியில் முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ பணிபுரிய ஆண்,பெண் தேவை.

- நாள் ஒன்றிற்கான ஊதியம் 4,000 முதல் 5,000 வரை (கமிஷன் அடிப்படையில்) வழங்கப்படும்.
- மாதாந்த ஊதியம் 120,000/=

உங்கள் சுய விபரங்களை விரைவாக எமது வட்சப் இலக்கத்திற்கு அனுப்பி வைக்கவும்.

**077 909 0015**

(C-5159)

## வேலையாட்கள் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சியில் இயங்கி வரும் வெளிநாட்டுப் பொதிகள் சேவை நிறுவனம் மற்றும் புடைவைக் கடை ஒன்றிற்கு முன்னனுபவம் உள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை.

**076 889 1308**
**077 606 1333**

(6964)

## மணப்பெண் தேவை

01. வண்ணார்பண்ணை, இந்து, 1985, பூரட்டாதி, Graduate, Netherland Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(54281)
02. கரவெட்டி, இந்து, 1984, மிருகசீரிடம், BSc Engineering, Netherland Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(33330)
03. சாவகச்சேரி, இந்து, 1975, பூராடம், own Business, Divorce, Norway Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (23645)
04. கோண்டாவில், இந்து, 1978, ரோகிணி, BE Electronical Engineering, Denmark Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(19890)
05. புலோலி, இந்து, 1993, புனர்பூசம், Bachelor of Computer Science (Sweden), Software Engineer, Sweden Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(36387)
06. முல்லைத்தீவு - யாழ்ப்பாணம், இந்து, 1985, மிருகசீரிடம், A/L, Sweden Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(28374)
07. சாவகச்சேரி, இந்து, 1985, மிருகசீரிடம், A/L, Own Business, Swiss Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(29108)
08. புதுக்குடியிருப்பு, இந்து, 1979, பூரம், BSc (Hons) Computer Engineer, Software Engineer, Swiss Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை.(26389)
09. கந்தரோடை - கட்டுவன், 1991, இந்து, ரோகிணி, BSc in Civil Engineer, Project Engineer, Singapore Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57742)
10. கரவெட்டி, இந்து, 1985, விசாகம், Bsc in computer science, TESCO, UK Citizen Divorce மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57569)
11. நீர்வேலி, இந்து, 1982, திருவோணம், A/L, Manager, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (57067)
12. காரைநகர், இந்து, 1990, விசாகம், BSc, B-Tech, Lecturer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (56879)
13. வடமராட்சி, இந்து, 1989, பரணி, IT Degree (India), Cashier, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54881)
14. காரைநகர், இந்து, 1994, மகம், MSc (UK), Environmental Engineer, UK Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (54246)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம். எல்லா விதமான ஜாதியிலும், Unmarried, Divorce என்பன உண்டு.

(C-5158)

S.Sharma J.P
www.thaalee.com
077 189 0367
077 539 3728


வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127



வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (7002)

076 825 7716 (ஆகாஸ்)



A/L ICT வகுப்புக்கள்.திரு.இ.குமரன்

A/L 2028
New Batch Starts on 7/3/2026, Saturday at 4 pm

A/L Repeat Batch
100% Practical

A/L 2026
Python Programming
Web development
Paper Class

A/L 2027
Computer Networks

(2114)

வடக்கில் ICT பாடத்தில் அதிக A சித்தி பெறும் ஒரே நிறுவனம்
ICT துறையில் 24 வருட கற்பித்தல் அனுபவம்

MIS ICT COLLEGE TP:0776577359, #74, Sabapathy Lane, Jaffna.



வெளிநாடுகளுக்கான துரித தபால் பொதிகள் சேவை

அருள் குளோபல் எக்ஸ்பிரஸ்
# 01 பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம்.
021 222 6113, 076 443 1576

அருள்ஸ் (பிறைவேட்) லிமிட்டட்
# 10, மாநகர சபை புதிய கட்டடத் தொகுதி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 3536, 077 657 9349

(C-5157)



o அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மையுடன். o 25 வருடங்களாக மக்கள் நம்பிக்கையை வென்ற நிறுவனம்.
o அனுப்பப்படும் பொதிகளுக்கு காப்புறுதி செய்ய வேண்டியதில்லை. முழுப் பெறுமதியையும் எமது நிறுவனம் பொறுப்பேற்கும்.
கிளைகள் o உங்கள் வீடுகளுக்கு வந்து ஏற்றுக் கொள்ளப்படும் சேவைக்கு மேலதிக கட்டணம் எதுவும் செலுத்த வேண்டியதில்லை.

# 01 தபாற் கந்தோர் வீதி, சாவகச்சேரி. | # 01, பெற்றோல் செற் எதிரில், நெல்லியடி. | CTB பஸ் டிப்போ எதிரில் பருத்தித்துறை. | கொமர்ஷல் வங்கி அருகில் கிளிநொச்சி.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.03.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org